அயிட்டம் எண்: 01 கோர்ட் எண்: 1

தேசிய பசுமை தீர்ப்பாயம், முதன்மை அமர்வு, புதுடெல்லி முன்

அப்பீல் எண்: 87/2018

**(M.A.No.1741/2018 & M.A. No.1747/2018)**

வேதாந்தா லிமிடெட்

- மேல்முறையீட்டார்

எதிர்

தமிழ்நாடு அரசு மற்றும் பலர்

- எதிர் மனுதாரர்கள்

அமர்வு :

மாண்புமிகு நீதியரசர் அதார்ஷ் குமார் கோயல், தலைவர்

மாண்புமிகு நீதியரசர் ரகுவேந்தர **S.**ரதோர்,

நீதிதுறை உறுப்பினர்

மாண்புமிகு நீதியரசர் மு.ராம கிருஷ்ணன், நீதிதுறை உறுப்பினர்

மாண்புமிகு நீதியரசர் சத்தியவான் சிங் கர்பீயல், கைதேர்ந்த நிபுணர்,

மாண்புமிகு நீதியரசர் நஜின் நந்தா, கைதேர்ந்த நிபுணர்,

மேல்முறையீட்டார் வழக்கறிஞர் :

திரு. **C.A.**சுந்தரம், மூத்த வழக்கறிஞர், ரோகிணி மூஷா, வழக்கறிஞர்.

எதிர்மனுதாரர் வழக்கறிஞர்கள்:

திரு. **C.S.**வைத்தியநாதன், மூத்த வழக்கறிஞர்.

திரு. ஆ. யோகேஷ் கண்ணா, வழக்கறிஞர் மற்றும் அப்துல் சலீம், வழக்கறிஞர், எதிர்மனுதார்கள் 1 மற்றும் 2,

திரு. **R**.ராகேஷ் சர்மா மற்றும் **V**. மௌலி, வழக்கறிஞர்கள், எதிர்மனுதார்கள் 2 மற்றும் 3,

திரு.வைகோ நேரடியாக ஆஜராகும் நபர்,

திரு.**B.**வினோத் கண்ணா, வழக்கறிஞர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், எதிர்மனுதார் 4,

திரு. **E.** சுப்பு முத்துராமலிங்கம், வழக்கறிஞர் எதிர்மனுதார் 5,

திரு. சதீஷ் குமார், வழக்கறிஞர், **CPCB,**

திரு. ரித்விக் துட்டா மற்றும் திருமதி. கன்னிகா சுட் வழக்கறிஞர்கள், மனு செய்தவர் பாத்திமாவிற்காக,

வழக்கு வாதுரை முடிந்த காலம் : 10.12.2018

உத்தரவு மேல் ஏற்றப்பட்டது :15.12.2018

## உத்தரவு

இந்த மேல்முறையீடு தேசிய பசுமை தீர்ப்பாணையம் 2010 சட்டப்பிரிவு **16**ன் கீழ் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. (இனி தேசிய பசுமை தீர்ப்பாணையம் என்பது **NGT Act** என அழைக்கப்படும்). இந்த மேல்முறையீடு தமிழ்நாடு மாசுக்கட்டுபாடு வாரியம் பிறப்பித்த 09.04.2018 மற்றும் 12.04.2018ல் மற்றும் 23.05.2018 உத்தரவுகளின் மேல் வரையப்பட்ட மேல்முறையீடு இனி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் என்பது **TNPCB** என்று அழைக்கப்படும். தமிழ்நாடு நீர் மாசுப்படுவதை தடுத்தல் சட்டம் 1974 (இனி நீர் சட்டம் என அழைக்கப்படும்) கீழ் தமிழ்நாடு அரசு 25.05.2018 தேதியில் பிறப்பித்த உத்தரவிற்கு மேல்முறையீடு மற்றும் காற்று மாசு கட்டுப்பாடு தடுத்தல் சட்டம் 1981 (இனி காற்று சட்டம் என அழைக்கப்படும்) இந்த மேல்முறையீடு முதலில் இந்த வாரியத்தில் 22.06.2018ல் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் 28.05.2018 தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் 28.05.2018ல் நிரந்தரமாக

மேல்முறையீட்டார் ஆலையை முத்திரையிட்டு நிரந்தரமாக மூடிவிட உத்தரவிட்ட நிலையிலும், அந்த நடவடிக்கையையும் எதிர்த்து 17.07.2018ல் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை இந்த மேல்முறையீட்டு வாரியத்தின் முன் கோப்பில் எடுத்து அந்த உத்தரவை எதிர்த்தும் அதையும் சீர்தூக்கி பார்க்கவும் செய்யப்பட்ட மேல்முறையீடு ஆகும்.

வழக்கு விவரங்கள்:

2. மேல்முறையீட்டாருடைய வழக்கு யாதெனில் அவர்கள் உலோக தாதுக்களை (தாமிரதாது உட்பட) பிரித்தெடுத்து அவற்றை தனித்து நிலைப்படுத்தும் தொழிலும் செய்து வருகிறார்கள். இது வகைக்கு அவர்கள் ஒரு தாமிர உருக்கு ஆலை தூத்துக்குடி **State Industries Promotion Corporation of Tamilnadu Limited (Sipcot)** (தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டு கழகம் லிமிடெட்), இன்டஸ்ரியல் காம்ப்ளக்ஸ், தூத்துக்குடி, தமிழ்நாடு நிறுவி உள்ளார்கள். இந்த தொழிற்கூடத்தில் மேல்முறையீட்டார் தாமிர கத்தோடு, தாமிரக் கம்பிகள், கந்தக அமிலம், பாஸ்பாரிக் அமிலம் மற்றும் அதைச் சார்ந்த உபரி வகை பொருட்களும் உற்பத்தி செய்தார்கள். இந்த மேலே சொன்ன பொருட்கள் தாமிர தாதுவை உருக்கும் காலத்தில் உற்பத்தியாகும் உபபொருட்கள். மேலே சொன்ன தொழிற்சாலை தமிழ்நாடு அரசாங்கத்தால் 13.05.1987 அங்கீகரிக்கப்பட்டு அந்த தொழிற்வளாகம் 1083 ஏக்கர் நிலத்தில் தூத்துக்குடி தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகிறது. அந்த தொழிற்வளாகத்தின் மொத்த தொழில் முதலீடு ரூ.938 இலட்சங்களாகும். சிப்காட் நிறுவனம் 1994ல் நிலங்களை மேல்முறையீட்டாருக்கு ஜாரி செய்தார்கள். மேலும் சுற்றுப்புற சூழ்நிலை, அங்கீகாரம். 16.01.1995 தேதியில் சுற்றுப்புற சூழ்நிலை, காடு மற்றும் காலநிலை மாற்றம், அமைச்சகம் ஒப்புதல் அளித்தது. (இனி அந்த அமைச்சகத்தை **"MoEF&CC"** என்று அழைக்கப்படும்). **TNPCB** மேற்படி தொழிற்கூடம் தொடங்குவதற்கு சட்டப்பிரிவு காற்று சட்டம் 21 மற்றும் நீர் சட்டம் 25ன் கீழ் 22.05.1995 தேதியில் ஒப்புதல் அளித்து, தொழிற்கூடத்தை இயக்கும் உரிமை 14.10.1996ல் **TNPCB** கொடுத்தது. உற்பத்தி 01.01.1997 ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கூடுதல் உற்பத்திக்கு **MoEF&CC** மற்றும் **TNPCB** அங்கிகாரம் அளித்தார்கள்.

3. ரிட் மனுக்கள் 15501-03/1996, 5769/1997 மற்றும் 16861/1998 கீழ் 28.09.2010 தீர்ப்பளிக்கப்பட்டு, சுற்றுப்புற சூழ்நிலை அங்கீகார உத்தரவு சென்னை உயர்நீதிமன்றத்தால் செல்லத்தக்கது அல்ல என்று தீர்ப்பு கொடுத்து, தொழிற்சாலையை மூடும்படியாக உத்தரவிட்டார்கள். அந்த ரிட்

மனுக்கள் மதிமுக என்ற ஒரு அரசியல் கட்சியின் மற்றும் **CITU** என்ற ஒரு தொழிற்சங்கமும் தொடங்கிய ரிட் மனுக்கள். இந்த உயர்நீதிமன்ற உத்தரவுகளை தற்காலிகமாக தடை உத்தரவுகள் பெற்று பின்னர் உயர்நீதிமன்ற உத்தரவுகளை, உச்ச நீதிமன்றம் 02.04.2013 தேதியில் ஸ்டெர்லைட் இன்ட்ஸ்ரீஸ் (இந்தியா) லிமிடெட் மற்றும் சிலர் எதிர் யூனியன் ஆப் இந்தியா மற்றும் பலர் என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டை அனுமதித்து.[1] ***(2013 (4) SCC 575),** உயர்நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்தது.

4. 29.03.2013 தேதியில் **TNPCB** தொழிற்சாலையை மூடும்படியாக பிரிவு **31A** காற்று சட்டத்தின் கீழ் பிறப்பித்தார்கள். 23.03.2013 தேதியில் நடந்த சம்பவத்தை காரணம் காட்டி, காற்று மாசுபடுவதாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவை இந்த தீர்ப்பாயம் 08.08.2013 தேதியிட்ட தீர்ப்பின் மூலம், மேல்முறையீட்டு எண்கள்: 57-58/2013, ஸ்டெர்லைட் இன்டஸ்ரீஸ் (இந்தியா) லிமிடெட் எதிர் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் பலர்[2] (2013 **SCC Online NGT 68) TNPCB** உத்தரவை ரத்து செய்தது**.** மேலே சொன்ன தீர்ப்புகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் சிவில் அப்பீல் எண்: 8773-74/2013 நிலுவையில் இருப்பதாக அறிகிறோம். இந்த வழக்குகளில் எந்தவித தற்காலிக தடங்கல் உத்தரவும் பிறப்பிக்காத நிலையில், மேல்முறையீட்டார் உற்பத்தியை தொடங்கினார்கள். மேல்முறையீட்டார் கம்பெனிக்கு, உற்பத்தி உத்தரவை 31.03.2018 வரை காற்று சட்டம் மற்றும் நீர் சட்டத்தின் கீழ் தொழில் செய்யும் உரிமைக் கொடுக்கப்பட்டுள்ளது. மேல்முறையீட்டார் 31.01.2018 தேதியில் மேற்படி உரிமைகளை புதுப்பித்துக் கொடுக்குமாறு, காற்று சட்டம் மற்றும் நீர் சட்டத்தின்கீழ் 60 நாட்களுக்கு உரிமைகள் முடியும் முன்னரே மனு கொடுத்தார்கள். 27.02.2018 தேதியில் **TNPCB-**லிருந்து ஒரு குழு வந்து பரிசீலித்து, **TNPCB** மேல்முறையீட்டார் தேவையான சட்டக் கட்டுபாடுகளையும் மற்றும் அதை அனுசரித்து செய்ய வேண்டிய நடைமுறைகளையும் பின்பற்றுவதாக அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

5. 24.03.2018 தேதியில் சில நபர்கள் மேல் முறையீட்டார் கூடுதல் உற்பத்தி செய்யக் கோரிய அனுமதித்தையும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். மேல்முறையீட்டார் ரிட் மனு எண்: **W.P.(MD) No.7313/2018** கீழ் போலீஸ் பாதுகாப்பு கோரினார்கள். சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை 04.04.2018 தேதியில் மேலே சொன்ன ரிட் மனுக்களை தீர்ப்பு கொடுத்து,

மேல்முறையீட்டார்களுடைய போலீஸ் பாதுகாப்பு கோரிய பரிகாரங்களை பரிசீலிக்குமாறு உத்தரவிட்டார்கள்.

6. இந்த மேல்முறையீட்டார் **TNPCB** 09.04.2018 தேதியில் பிறப்பித்த உத்தரவுகளை எதிர்த்து 12.04.2018 தேதியில் மேல்முறையீட்டு ஆணையத்தின் முன் பிறப்பித்த மேல்முறையீடு செய்தார்கள். மேல்முறையீட்டார் **TNPCB** தங்களது உரிமத்தை புதுப்பிக்க 13.04.2018 தேதியில் கொடுத்த மனுவை மறுபரிசீலனை செய்யக் கோரி முறையீடு செய்தார்கள்.

7. இதற்கிடையில் 12.04.2018 தேதியில் **TNPCB** மேலும் ஒரு உத்தரவு நீர் சட்டம் பிரிவு 33**A** மற்றும் காற்று சட்டம் 31**A** கீழ் தொழிற்சாலை **TNPCB** உத்தரவு மற்றும் அவர்களது உரிமம் புதுப்பித்தல், இவற்றை அங்கீகாரம் இல்லாமல், தொழில்கூடம் மேல் நடத்தக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார்கள்.

8. மேல்முறையீட்டார் தொழிற்சாலைக்கு எதிராக போராட்டங்கள் தொடர்ந்து கொண்டிருந்தநிலையில், மேல்முறையீட்டார் **W.P.(MD) No.11190/2018** சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரிவு 144 **CR.P.C**-ன் கீழ் போராட்டங்களை தடுத்து நிறுத்துவதற்காக உத்தரவு கோரினார்கள். அந்த மனு 18.05.2018 தேதியில் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அந்த உத்தரவில் அதிகாரிகள் மேல்முறையீட்டாருடைய, கோரிக்கைகளை பரிசீலனை செய்ய உத்தரவிட்டார்கள். அந்த நிலையில் 144 **CRPC** தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த நிலையிலும் போராட்டங்கள் தொடர்ந்து வந்தன. 22.05.2018 தேதியில் போராட்டக்காரர்கள் மீது போலீசார் சுட்டதின் காரணமாக 13 நபர்கள் இறந்து விட்டார்கள்.

9. மேலும் 23.05.2018 தேதியில் **TNPCB** மேல்முறையீட்டார் நிறுவனத்திற்கு கொடுக்கும் மின்சார சப்ளையும் துண்டிப்பதற்கும், மூடுவதற்கும் உத்தரவிட்டார்கள். அவர்கள் 18.05.2018 மற்றும் 19.05.2018 தேதியில் தொழிற்சாலையை ஆராய்ச்சி செய்யும் காலத்தில், தொழிற்கூடம் தங்களது உற்பத்தியை தொடங்குவதற்கான பணிகளில் ஈடுபட்டுவரும் காரணத்தினால், மின்சார துண்டிப்பு ஏற்படுத்த உத்தரவிட்டதாக கோரப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாருடைய கட்சியின்படி உற்பத்தி ஒன்றும் தொழிற்சாலையில் நடைபெறவில்லை. ஆனால் அதை தற்காலிக பராமரிப்புக்கான மூடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், ஆலை இயக்கப்படவில்லை என்றும் கூறுகிறார்கள்.

10. 25.05.2018 தேதியில் **TNPCB** முன்பு மேல்முறையீட்டார்கள் தங்களுடைய அவசர தேவைகளுக்கு மின்சாரம் கொடுப்பதன் மூலம், ஆபத்தான விளைவுகளை தவிர்ப்பதற்கும், மேலும் சல்ப்யுரிக் அமிலம் சேமிக்கும் தொட்டி துருப்பிடிக்கும் தன்மையுடையது என்ற விவரத்தையும் முன்வைத்தார்கள். ஒரு உலோகம் மற்றும் ரசாயண தொழிற்சாலை மூடுவதற்கு சில தொழில் ரீதியான கட்டுப்பாடுகளை அனுசரிக்க வேண்டும் என்றும் கூறினார்கள். மேல்முறையீட்டார் **WP.(MD) No.13144/2018,** 19.06.2018 தேதியில் உயர்நீதிமன்றம் சென்னையில் தாக்கல் செய்து அதை மேல்நடத்தாமல் மனுவை திரும்ப பெற்றுக்கொண்டு, இந்த தீர்ப்பாயத்தின் முன் பரிகாரம் கோருகிறார்கள். 16.06.2018 தேதியில் சல்ப்யுரிக் அமிலம் கிட்டங்கி தொட்டியில் ஒரு கசிவு ஏற்பட்டது அந்தக் காரணத்தினால் 19.06.2018 தேதியில் பாதுகாப்பு நிலைக் கருதி, உயர்நீதிமன்றத்தில் உத்தரவுகள் அளிக்குமாறு கோரியிருந்தார்கள். மேல்முறையீட்டார் அந்த ரிட் மனு வாபஸ் வாங்க வேண்டிய சூழ்நிலை எந்தக் காரணத்தினால் ஏற்பட்டது என்று கூறும் பொழுது இந்த தீர்ப்பாயம் அந்தக் காலக்கட்டத்தில் விடுமுறை காரணமாக மூடப்பட்டு இருந்தது. தீர்ப்பாயம் திறந்தவுடன் ரிட் மனு வாபஸ் பெறப்பட்டு, தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டதாக தங்கள் கட்சியை முன் வைக்கிறார்கள்.

11. 28.05.2018 தமிழ்நாடு அரசு **TNPCB** பிறப்பித்த உத்தரவுகளை உறுதி செய்தார்கள். மேலும் **TNPCB**யை நீர் சட்டத்தின் கீழ் சட்டப்பிரிவு 18(1)(**b**) கீழ் தொழிற்சாலையை சீல் வைக்குமாறு மற்றும் நிரந்தரமாக மூடுமாறும் உத்தரவிட்டார்கள்.

12. இந்த மேல்முறையீடு 06.06.2018 தேதியில் மேல்முறையீட்டு ஆணையத்தின் கீழ் வழக்கு வந்த நிலையில் அதை **TNPCB** எதிர்த்து தமிழ்நாடு அரசு 28.05.2018 தேதியில் பிறந்த உத்தரவின் காரணமாக, அந்த மேல்முறையீடு செல்லத்தக்கது அல்ல. அது பயனற்ற மேல்முறையீடாக கருத வேண்டும் என்று கட்சி செய்தார்கள். மேல்முறையீடு ஆணையம் சரியென ஒப்புக் கொண்டது. மேலும் தமிழ்நாடு அரசு 28.05.2018 தேதியில் உத்தரவு பிறப்பித்தபின் இந்த மேல்முறையீட்டை மேல் நடத்துவதற்கு நடத்த முடியாத நிலை என்று தெரிவித்தது. அந்த நிலையில் வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீடு 22.06.2018 தேதியில் மேல்முறையீட்டார் முதலில் மேல்முறையீட்டு ஆணையத்தின் முன் தாக்கல் செய்த மேல்முறையீட்டை வாபஸ் பெற்று புதிதாக ஒரு கூட்டு மேல்முறையீடுகளாக செய்வதாக கூறினார்கள். மேலும்

உயர்நீதிமன்றத்தில் ரிட் மனுவை வாபஸ் வாங்கியதாகவும் தெளிவுப்படுத்தினார்கள்.

தீர்ப்பாயத்திலும் மற்றும் மாண்புமிகு உச்சநீதிமன்றத்திலும் நடைபெற்ற வழக்கு விவரங்கள்:

13. 09.08.2018 தேதி வாய்தாவில் இந்த வழக்கு நடக்கும் காலத்தில் ஒரு முதல்நிலை எதிர்ப்பு தமிழ்நாடு அரசாங்கத்தின் சார்பாகவும் மற்றும் **TNPCB** சார்பாகவும் எழுப்பப்பட்டது. இந்த மேல்முறையீடு தமிழ்நாடு அரசாங்கத்தின் உத்தரவின் மீது எழுப்பியது காரணமாக மேல்முறையீடு செல்லத்தக்கதல்ல என்பதாகும். தீர்ப்பாயம் அந்த எதிர்ப்பு நிலைக்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்க முடியாத நிலையில் இருப்பதாக ஒரு முடிவிற்கு வந்தது. அதன் காரணம் என்னவென்றால் இந்த மேல்முறையீடு நீர் சட்டம் **33A** பிரிவின் கீழ் **TNPCB** பிறப்பித்த உத்தரவின் மீது எழுப்பப்பட்ட மேல்முறையீடு ஆகும். அது எப்படி இருப்பினும் **TNPCB** கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் அவர்களது வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பட்டது. அதன் காரணம் யாதெனில் **TNPCB** வழக்கறிஞர் பூமியின் அடிதளத்தில் எந்த அளவு உப்புத்தன்மை ஒழுகி பூமிக்குள் **(TDS)** இருக்கும் தண்ணீருடன் கலந்து வருகிறது மற்றும் அதை சுற்றியுள்ள விஸ்தீரணத்திற்கு படங்கள் **(Photograph)** தாமிரதாதுவின் கசடு சென்று இருக்கிறது என்ற விவரத்தை கணிப்பதற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மத்திய மாசுக்கட்டுபாடு வாரியம் **(CPCB)**யிடம் ஒரு அறிக்கை கொடுக்கும் படியாக உத்தரவிடப்பட்டது. அதாவது எப்படி ஆலைக்குள் இருக்கும் பொருள்களை அகற்றவோ அல்லது பாதுகாக்க வழிமுறை விவரம் கோரப்பட்டது. தீர்ப்பாயம் மேல்முறையீட்டாளருக்கு குறிப்பாக நிர்வாக பகுதிக்கு மட்டும் செல்ல ஏற்பாடு கொடுத்து மற்றும் மாவட்ட மாஜிஸ்ரேட்க்கு (மாவட்ட ஆட்சியர்) மேல்முறையீட்டார் உற்பத்தி தொழில்கூடம் அன்றி இதர இடம் செல்ல அனுமதிக்க உத்தரவிடப்பட்டது. **C.A.No.8250/2018 The State of Tamilnadu & others Vs Vedanta Limited** என்ற தீர்ப்பாய 09.04.2008 உத்தரவிற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் ஒரு மேல்முறையீடு செய்யப்பட்டது. உச்சநீதிமன்றம் அந்த மேல்முறையீட்டை 17.08.2018ல் கீழ்கண்ட விவரங்களுடன் தீர்ப்பை முடித்துக்கொண்டது.

"தேசிய பசுமை தீர்ப்பாணையம் இந்த வழக்கை மேல்நடத்தி அதனுடைய சாதக பாதக நிலையை அனுசரித்து ஒரு நிரந்தர முடிவெடுத்து வரும் படியாகவும், அந்த முடிவானது இந்த வழக்கு தீர்ப்பாயத்தின் முன்

மேல்முறையீடாக நடத்த முடியுமா? மற்றும் அதனுடைய வழக்கு விவரங்கள் நிலை கருதி ஒரு முடிவிற்கு வரும்படியாக உத்தரவிடப்பட்டது"

14. 20.08.2018 தேதியில் மீண்டும் ஒரு முறை இந்த வழக்கு பரிசீலனை செய்யப்பட்டது. அதில் தொழிற்சாலையை மூடும் அளவிற்கு எந்தவித பெரிய சுற்றுசூழல் விரோத நடவடிக்கையோ தங்கள் முன் முன்வைக்கப்படவில்லை. ஆனால் வழக்கு விவரங்கள் மற்றும் சூழல் நிலை கருதி **TNPCB** மேலும் வாய்ப்பு வழங்கி அவர்களுடைய கருத்துக்களை கேட்பதற்காக ஒத்தி வைக்கப்பட்டது. மேலும் தொழிற்சாலையை சுற்றி வசிப்பவர்களுடைய கருத்துக்களையும் கேட்டறிய ஒத்தி வைக்கப்பட்டது. அதற்காக ஒரு சுயேட்சையான கமிட்டி ஒன்று சம்பவ இடத்திற்கு சென்று எந்த நிலையில் எப்படி இருக்கின்றன என்று எதார்த்த நிலையில் ஆராய்ந்து ஒரு நல்ல நியாயமான முடிவிற்கு வரும்படியாகவும், அதில் சுற்றியுள்ள மக்களுடைய கருத்துக்களையும் கேட்டறிய உத்தரவிடப்பட்டது. அந்த கமிட்டியானது உயர்நீதிமன்றத்தில் முன்னால் தலைமை நீதிஅரசர் பணி ஓய்வு பெற்றவர் தலைமையில் மற்றும் **CPCB** மற்றும் **MoEF&CC** அவர்களுடைய பிரதிநிதிகளும் சேர்ந்து செயல்படும்படியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த கமிட்டியானது ஓர் அறிக்கை இந்த தீர்ப்பாயத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் அந்த நிலை கருதி மேலும் முடிவுகளுக்கு வழிவகுக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்கிடையில் மேல்முறையீட்டார் **CPCB** அவர்களுடைய பரிந்துரைகளையும் மற்றும் **MoEF&CC** மற்றும் **CPCB** அவர்களுடைய பிரதிநிதிகள் கண்காணிப்பின் கீழ் அசாம்பாவித சம்பவங்களை தவிர்ப்பதற்காக **CPCB** பரிந்துரைகளை செயல்படுத்த உத்தரவிடப்பட்டது. **CPCB** அவர்களுடைய பரிந்துரைகள் பின்வருமாறு.

<u>2. மேல்முறையீட்டாரின் தொழிற்கூடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஜடப்பொருள்கள் சம்மந்தமாக கீழ்கண்ட பரிந்துரைகள் செய்யப்பட்டது:-</u>

தீ விபத்துக்களை தவிர்ப்பதற்கும் மற்றும் சுற்றுசூழல்களை பாதுகாக்கவும், அங்கு சேமிக்கப்பட்டுள்ள இராசயண பொருட்கள் மற்றும் கழிவு பொருள்கள் அவற்றை கீழ்கண்டவாறு செயல்படுத்த பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

அ) மீதமுள்ள எரிபொருள் எண்ணெய் ஏதேனும் தொட்டிகளில் சேமிக்கப்பட்டிருந்தால் அது தீ விபத்திற்கு வழிவகுக்கும் அதனால் தொழிற்சாலையில் தீ அணைப்பு உபகரணங்கள் நிறுவ பரிந்துரை

செய்யப்பட்டது. இதன்மூலம் அந்த இடத்தில் ஏதேனும் எரிபொருள் தீ விபத்தை தவிர்க்கும் நிலையில் இருக்கவும்.

ஆ) தொழிற்சாலை நீண்டநாளாக ஓடாத காரணத்தினால் அதில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் **Electrolyte** பொருள்கள் மற்றும் செல் வீட்டில் **(Cell House)** அவற்றையும் ஒரு பாதுகாப்பான இடத்திற்கு பத்திரமாக அகற்றி செயல்படுத்தவும்.

இ) சேமிப்பு கிட்டங்கியில் வைக்கப்பட்டுள்ள தாமிரதாது அவற்றை வேறு இடத்திற்கு அகற்றும் காலம் வரை சரியான பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கவும்.

ஈ) இனி வரும் குறுகிய காலத்தில் தொழிற்சாலை நடத்த போவதில்லை என்று தீர்மானிக்கும் நிலையில் எல்லா கச்சா, இராசயண பொருள்களையும் மற்றும் நடுவாந்திர பொருள்களையும் உபபொருள்களையும் மற்றும் கழிவு பொருள்களையும் தொழிற்கூடத்தில் இருந்து வெளியேற்றுவதன் மூலம் சுற்றுபுற சூழ்நிலையில் பின்விளைவுகளை தவிர்க்கவும்.

உ) சேமிப்பு கட்டிடங்கள் மற்றும் பைப் லைன் 3 அயிட்டம் நம்பர் 5 ஆகஸ்ட் 202018 **dv** ஆபத்தான உடன் எரியக்கூடிய இராசயண பொருள்கள் மற்றும் சாமான்கள் குளிரூட்டும் மர வகைகள் இவற்றை கையாளுவதற்கு உகந்த நபர்களின் மேற்பார்வையில் இனி வரும் காலத்தில் பெரிய விபத்துக்கள் தவிர்க்கவும், எந்தவொரு கட்டிடத்திலும் தீயின் காரணமாகவும் மற்றும் நொறுங்கிவிழுதல் காரணமாகவும் மற்றும் நஷ்டி ஏற்படுத்தக்கூடிய காரணமாகவும் அமையக்கூடியவை தவிர்க்கும் ஏற்பாட்டுகளிலும்.

ஊ) ஜிப்சம் தொட்டியில் சேமிக்கப்பட்டுள்ள அமில வெளியேற்று பொருள்கள் அவற்றை தகுந்த முறையில் வினைப்படுத்தி பின் எந்த அளவிற்கு அவற்றை வெளியேற்றக்கூடிய உச்ச நிலை கருதி அவற்றை வெளியேற்றும் நிலையிலும்,

எ) ஜிப்சம் பொருள்களுக்கு விலையில்லாத காரணத்தினால் அவற்றை பாதுகாப்பாக சேமிப்பு அடக்கில் வைக்கவும், நடவடிக்கை எடுக்கவும். மேலும் தாமிர கசடுகளை உபயோகித்தோ அல்லது வெளியேற்றியோ சுற்றுசூழ்நிலைக்கு பாதகமற்ற நிலையில் செயல்படுவதற்கு,

ஏ) தற்பொழுது இருக்கும் பாதுகாக்கப்பட்ட சேமிப்பு கிடங்கிலிருந்து வெளியேறும் **Leachate** அவற்றை தகுந்த முறையில் வினைப்படுத்தி பின் அந்த **Secured landfil (SLF)** தகுந்த முறையில் மூடிவிடவேண்டும்.

ஐ) சுற்றியுள்ள நிலங்களின் அடித்தளம் தண்ணீர் அவ்வபொழுது கண்காணிக்கப்பட வேண்டும். அது **SLF** சரியாக செய்யப்பட்டுள்ளதா மற்றும் அதில் இருந்து ஏற்படும் நிலத்தடி கசிவுகள் தவிர்க்க.

15) **C.A.No.9088/2018, The State of Tamilnadu & others Vs Vedanta Limited** என்ற வழக்கு இந்த தீர்ப்பாணையத்தின் 20.08.2018 உத்தரவின் பேரில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் அது 10.09.2018 தேதியில் தீர்வு செய்யப்பட்டு அந்த தீர்வில் எங்ஙனம் குழு தீர்மானம் செய்கிறதோ அந்த அறிக்கையை பெறப்பட்டு அதை அனுசரித்து அதில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை உச்சநீதிமன்றம் 17.08.2018 தேதியில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களின் படி நடைமுறைப்படுத்த வேண்டும்.

16) மேலே சொன்ன கமிட்டியின் தலைவராக நீதிஅரசர் **S.J.Vajifdar** அவர்கள் தன்னால் இந்த வழக்கை மேல்நடத்த முடியாத காரணத்தினால் அவருக்கு பதிலாக நீதிஅரசர் தருண் அகர்வால் முன்னால், மேகாலய உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ஓய்வு பதவியில் அமர்த்தப்பட்டார்.

17) மேலே சொன்ன குழுவானது தன்னுடைய 20.11.2018 தேதியிட்ட அறிக்கை இந்த தீர்ப்பாணையத்தின் முன் 28.11.2018 தேதியில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த கமிட்டியின் அறிக்கை மேல்முறையீட்டாரின் கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் தமிழ்நாடு அரசு வழக்கறிஞர் மற்றும் **TNPCB** வழக்கறிஞர் மற்றும் **CPCB** வழக்கறிஞர் அவர்களுக்கு கமிட்டியின் அறிக்கை நகலை அளிக்குமாறு உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கில் 3ம் நபர்களாக பங்கெடுத்த தலையீட்டார்களை அரசாங்கத்தினுடைய வழக்கறிஞருக்கு கூடயிருந்து வழக்கை நடத்த உதவி செய்யுமாறு கோரப்பட்டது. இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எல்லா நபர்களுக்கும் அறிக்கை சம்மந்தமாக தங்கள் கருத்துக்களை முன் வைக்குமாறு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

18) அந்த நிலையில் மேல்முறையீட்டார் சார்பாக கமிட்டினுடைய அறிக்கை சம்மந்தமாக தங்களுடைய கருத்துக்களும், அது போல **TNPCB** தங்களுடைய கருத்துக்களையும், அது போல வைகோ வழக்கில் 3ம் நபர் தலையீட்டார் மற்றும் பொது செயலாளர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம் **(MDMK)** அவர்களுக்கும் ஒரு நேர்முகமாக கருத்து பரிமாற்றங்கள் செய்தார்கள். அவர்கள் சுற்றியுள்ள மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தங்கள் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

19) அடிப்படையாக அந்த அறிக்கையில் தொழிற்சாலையை மூடியது நியாயமற்றது மற்றும் மேல்முறையீட்டார் அதில் குறிப்பிட்டுள்ள 25

நடைமுறைப்படுத்த வேண்டிய காரியங்களை பத்தி 4ல் அதன் முடிவுரையில் சொல்லப்பட்டுள்ளது. அந்த 25 நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டுப்பாடுகள் என்னவென்றால் சுற்றுசூழல் பராமரிப்பை நல்லமுறையில் கண்காணிக்க வேண்டும். மேலும் அது சம்மந்தமாக மேல்முறையீட்டார் சில நல்ல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர்களுடைய உற்பத்தி நடவடிக்கைகள் நல்லமுறையில் செயல்படுத்த வேண்டும் என்றும் அறிவுரை வழங்கப்பட்டது. அதில் கூறப்பட்ட விவரங்களும், அந்த கமிட்டி அறிக்கையின் முடிவுகளும் கீழ்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளன.

1) இயற்கை நியதிக்கு விரோதமாக அளிக்கப்பட்டுள்ள உத்தரவுகள் செல்லத்தக்கதல்ல. மேலும் மேல்முறையீட்டாருக்கு எந்தவித அறிவிப்போ அல்லது அது சம்மந்தமாக பங்கெடுப்போ அல்லது நேர்முக கேட்டலோ செய்யாத நிலையில் உத்தரவுகள் போடப்பட்டுள்ளன.

2) அந்த உத்தரவுகளில் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கு கூறப்பட்ட காரணங்களாக கருத இயலாது.

3) மற்ற விவரங்கள் அவையும் தொழிற்சாலையை மூடுவதற்கான காரணங்களாக கருதலாகாது. மேல்முறையீட்டார் சில நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறை குறிப்புகள் இவற்றை நடைமுறைப்படுத்தபடாமல் இருந்தாலும் அதை காரணம் காட்டி கொண்டு தொழிற்சாலையை நிரந்தரமாக மூட உத்தரவிட முடியாது.

4) தீர்ப்பாயம் மீண்டும் தொழிற்சாலையை திறந்து உற்பத்தி தொடங்கினர் அந்த நிலையில் அந்த கமிட்டி கீழ்கண்ட நடைமுறைப்படுத்தும் விவரங்களில் சொல்லியுள்ளார்கள்.

**a)** 44 எண் கட்டுப்பாட்டின் கீழ் இருசாராரும் 19.04.2005 தேதியில் ஒத்துக்கொண்ட பிரகாரம் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி நிலத்தடி தண்ணீர் தரம் கண்காணிக்கப்பட வேண்டும். மேலும் அதில் கன உலோகங்கள் உதாரணமாக **Arsenic, Cadmium, Silver, Copper, Fluoride** போன்றவை தொழிற்சாலையை சுற்றி மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் நிலத்தடி தண்ணீரை மாதம் ஒருமுறை சோதனை செய்து அந்த அறிக்கையை **TNPCB** யிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**b)** அந்த மாதிரி விவரங்கள் **TNPCB** அதிகாரிமுன் எடுக்கப்பட வேண்டும்.

**c)** மேலே சொன்ன விவரங்கள் அன்றி மாதிரி எடுக்கும் பொழுதோ கழிவு மற்றும் காற்று வெளியேற்றும் மற்றும் திடப்பொருள் கழிவுகள் அவற்றையும் கண்காணிப்புக்குழுவினால் செய்யப்பட வேண்டும். அந்த கண்காணிப்புகுழுவில் **TNPCB** –ஆல் நிர்மானிக்கப்பட வேண்டும். அது மாவட்ட ஆட்சியர் அவர்களுடைய பிரதிநிதியும் மற்றும் **TNPCB** அதிகாரியும் மற்றும் **NGO**களும் மற்றும் கல்வியாளர்களும், **TNPCB** 19.04.2005 வழங்கிய ஒப்புதல் நிபந்தனை எண்.43ன்படி அனுசரித்து செயல்படுத்த வேண்டும்.

**d)** அந்த அறிக்கை **TNPCB** மற்றும் **CPCB** அவர்களின் ஆய்வுக்கு அந்த அறிக்கை அனுப்பப்பட வேண்டும். **CPCB** குறிப்பிட்டுள்ள மேல்மட்ட நடைமுறை கட்டுப்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**e)** தாமிரகழிவு 11 இடங்களில் கொட்டப்பட்டுள்ளன அவற்றில் உப்பார் ஆறும் ஒன்று அவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும். தாமிரக்கழிவு ஆழமான நிலங்களை பூர்த்தி செய்து மூடுவதற்கு உபயோகப்படுத்தியிருந்தால் அந்த கூடுதல் தாமிர கழிவையும் நிலத்தினுடைய மேல்மட்ட நிலைக்கு மேல் இருப்பவையும் அப்புறப்படுத்த வேண்டும் மற்றும் பள்ள நிலத்தை நிரப்புவற்கு உபயோகப்படுத்தப்பட்ட பின் ஒரடி மண் அதன்மீது பரப்ப வேண்டும். ஏனென்றால் தாமிர கழிவு மேல் காற்றில் அடித்துச் செல்லப்படக்கூடாது.

**f)** தாமிர கழிவு கொட்டும் இடம் ஆலையின் உட்புறத்தில் உபயோகப்படுத்தாத கொட்டுதலாக இருந்தால் அவற்றையும் ஒன்றாக ஆக்கி அவற்றையும் ஆலையில் இருந்து ஒரு குறிப்பிட்ட காலதவணைக்குள் எடுத்துவிட வேண்டும். பின்னர் கொட்டப்பட்டுள்ள அடிமட்ட கழிவு இடம் மற்றும் அதை சுற்றியுள்ள பக்கச்சுவர்கள் அவைகளையும் **HDPE Liner** பாய்களால் மூடிவிடவேண்டும். மேலும் கம்பெனியானது தாமிர கழிவு உற்பத்தியும் மற்றும் தாமிர கழிவு விற்பனையும் ஒன்றுக்கொன்று என்ற விகிதாசாரத்தில் செயல்படுத்த வேண்டும். அதிக பட்சமாக கம்பெனியானது 10 நாட்கள் தாமிர கழிவை தங்களுடைய கொட்டும் தளத்தில் வைத்திருக்கலாம்.

**g)** அதுபோன்று ஜிம்சம் உபயோகப்படுத்தாமல் கொட்டப்படக்கூடிய தளத்தில் கெட்டியாக இருந்தால் அவற்றையும் ஒரு குறிப்பிட்ட காலத்தவணைக்குள் வெளியேற்றப்பட வேண்டும் பின்னர் கொட்டும் இடத்தின் அடிதளத்தை மற்றும் சுற்றுச்சுவர்களை **HDPE** பாய்களால் மூடவேண்டும். மேலும் கம்பெனியானது தாங்கள் செய்யும் உற்பத்தியும் மற்றும் தாங்கள்

வெளியேற்றும் ஜிம்சமும் ஒன்றுக்கொன்று என்ற விகிதாச்சாரத்தில் இருக்க வேண்டும். மேலும் உற்பத்தி செய்யப்பட்ட 10 நாட்களுக்குள் அந்த ஜிப்சத்தை அங்கிருந்து அகற்றப்பட வேண்டும்.

**h**) கம்பெனியானது எந்த தாமிர கழிவோ அல்லது ஜிப்சமோ அல்லது வேறு எந்த கழிவோ அகற்றுவதற்கு **TNPCB** அனுமதி பெற்றபின் அகற்ற வேண்டும்.

**i**) கம்பெனியானது ஆபத்தை விளைவிக்கும் பொருள் கழிவுகளை **Hazardous & other Wastes (Management & Transboundary Movement) Rules, 2016** கீழ் கையாள விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தை **TNPCB** ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அந்த மனுவின் மீது உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

**j**) சட்ட ரீதியாக எந்த ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் மூலமாக காற்று மாதிரியை பகுத்தாய்வு செய்ய வேண்டிய நிர்பந்தம் இல்லாத நிலையிலும், அப்படி இருந்தும் மேல்முறையீட்டார் ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் மூலமாக ஒரு காலநிலை நிர்ணயித்து அந்தந்த கால நிலையில் காற்றினுடைய மாசு நிலைப்பாடு மற்றும் சத்தத்தின் டெசிபில் அளவு மற்றும் **Stack emission** ஆகியவற்றை **MoEF&CC/NABL-**ஆல் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் மூலமாக நிர்ணயங்கள் செய்து அந்த நிர்ணயங்களை **TNPCB** ஸ்தாபனத்திற்கு அந்தந்த அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

**k**) மேல்முறையீட்டு கம்பெனி ஆலையை சுற்றி 25 மீட்டர் சுற்றளவிற்கு ஒரு பசுமை வளையம் அமைக்க வேண்டும். 25 மீட்டர் ஆலையை சுற்றி நாட்டு மரங்கள் மற்றும் உயரமான மரங்கள் நட்டு, பசுமை தன்மையை பாதுகாக்க வேண்டும்.

**l**) தமிழ்நாடு அரசு மற்றும் **TNPCB** ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசாங்க ஆஸ்பத்திரிகளிலிருந்து தகவல்கள் சேகரித்து, ஆலையை சுற்றி வசிப்பவர்களுடைய வெவ்வேறு விதமான வியாதிகள் மற்றும் அவர்கள் கொடுக்கும் புகார்கள் ஆகியவற்றினுடைய நிலைகளை கண்டறிந்து விவரங்கள் சேகரிக்க வேண்டும்.

**m**) மாநில அரசாங்கம் மேல்முறையீட்டார் எந்தெந்த நிலையில், எந்தெந்த ஆரோக்கிய பாதுகாப்பு தேவைகள் என்ன என்பதை கண்டறிய வேண்டும்.

**n)** குறிப்பாணை **(iii) 'Source apportionment study'** மற்றும் எண்: **(ix)**ல் **'Conducting a study on health hazards'** ஆகியவற்றை **NGT** தன்னுடைய 08.08.2013 தீர்ப்பில் மேல் முறையீடு 58/2013ல் கூறியவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும். அங்ஙனம் நடைமுறைப்படுத்தியதற்கு தமிழ்நாடு மாநில அரசாங்கமும் மற்றும் **TNPCB**யும் சேர்ந்து செய்ய வேண்டும். இந்த அறிக்கைகளை அவர்கள் **NGT-**யிடம் கால நிர்ணய இடைவெளியில் சமர்ப்பிக்க வேண்டும்.

**o)** மேல்முறையீட்டார் ஒரு ஜிப்சம் குட்டை கட்ட வேண்டும். அது உடனே செய்யப்பட வேண்டும். அதுவும் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் செய்யப்பட வேண்டும். அதற்கு **CPCB** அக்டோபர் 2014ல் சில வழிமுறைகள் வகுத்துள்ளன. அந்த வழிமுறைகளை அனுசரித்து செய்ய வேண்டும்.

**p)** மேல்முறையீட்டார் மீண்டும் ஒருமுறை **hydrogeological study for determining aquifer vulnerability and migration of leachate** (ஊடுருவு கரைசல்) **from the existing phosphogypsum pond through a reputed organization approved by the TNPCB as per condition no.15 of the Consent Order dated: 19/04/2005.**

**q) TNPCB-**க்கு மற்றும் மேல்முறையீட்டாருக்கு தனித்தனியே பூமிக்கடியில் உள்ள தண்ணீர் மாதிரிகளை பரிசீலிக்க வேண்டும். அந்த பரிசீலனை நிலத்தடி நீர் மாசுப்பட்டு இருக்கிறதா என்று கண்டறிய ஒரே இடங்களிலிருந்து தண்ணீர் எடுக்கப்பட வேண்டும். அந்த விவரங்களை **CPCB** ஒப்பிட்டு பார்க்க வேண்டும். **CPCB** சொல்லக்கூடிய அறிவுரைகளின்படி நடந்துக் கொள்ள வேண்டும்.

**r)** இறக்குமதி செய்யப்பட்ட தாமிர உலோக தாது நல்ல உயர் நிலைபாடுடையதா என்பது பற்றி ஆணைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தயார் செய்யப்பட வேண்டும்.

**s)** விதிகள் எவ்வாறு இருந்தாலும் மக்கள் மத்தியிலே எந்தவித ஐயப்பாடும் இல்லாமல் சுற்றி **SO2** வாயு கூடுதலாக இல்லாத அளவுக்கு தூத்துக்குடி வசிக்கும் மக்களிடையே நம்பிக்கை ஊட்டும் வகையில் புகை போக்கி உயரம் கூட்டப்பட வேண்டும்.

**t)** அந்த காலம் வரை கோபுரத்தை உயர்த்தாத நிலையில், தாமிரம் மற்றும் கந்தக அமிலம் தற்பொழுதுள்ள வெளிப் புகைப்போக்கியின் உயரத்தை அனுசரித்து குறைவான உற்பத்தி செய்ய வேண்டும்.

**u)** தாமிர உலோக தாது தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து மேல்முறையீட்டார் ஆலை வரை ஒரு மூடிய லாரி மூலமோ, அல்லது பைப் கன்வேயர் சிஸ்டம் மூலமாகவோ செய்ய வேண்டும்.

**v)** மேல்முறையீட்டார் காற்றினுடைய மாசு தன்மை மற்றும் கோபுரத்தின் மூலம் வெளியேற்றும் காற்றின் மாசு தன்மை. காற்று மற்றும் நீர் நிலைக் கட்டுப்பாடு மற்றும் மண் நிலை கட்டுப்பாடு மற்றும் கசடு தன்மை ஆகியவற்றை ஒரு மூன்றாவது நபர் மூலமாக ஆய்வு செய்து அந்த ஆய்வு அறிக்கையை, எந்தெந்த அதிகாரிகள் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறதோ அவர்களுக்கு அனுப்பி வைக்கும் வகையில் ஒரு தன்னிலை வரைமுறையை வகுக்க வேண்டும்.

**w)** இங்ஙனம் சேகரிக்கப்பட்ட எல்லாவித விவரங்களையும் மற்றும் சட்டநிலைப்படி அமல்ப்படுத்தப்பட்டதை அறிக்கையாகவும், **CTE/CTO/EC** மற்றும் கம்பெனியின் இணையதளத்தில் ஏற்றி, சுற்றுப்புற சூழ்நிலை விவரங்களை பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

**x) TNPCB** ஒரு கமிஷன் நியமித்து **"Regional Environmental Impact Assessment Study"** ஒன்று தூத்துக்குடி மாவட்டத்தை சுற்றி செய்ய ஒரு பொறுப்பான அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம் மூலம் அவ்வப்பொழுது வெளியிட வேண்டும்.

**y) CPCB** கூறிய கட்டுப்பாடுகளை **NGT** 20.08.2018 உத்தரவில் கண்டுள்ளது. அவற்றை மேல்முறையீட்டார் அதை அனுசரித்து நடக்க வேண்டும்.

20. நாங்கள் எல்லா கட்சியினுடைய வழக்கறிஞர்களையும் கேட்டு, அவர்களது உதவி கொண்டு ஆவணங்களை பரிசீலித்தோம்.

<u>மேல்முறையீட்டாரின் வழக்கின் விவரங்கள்:</u>

21) மேல்முறையீட்டாரின் முக்கியமான கட்சி முன்வைக்கப்படுவது யாதெனில் இந்த மேல்முறையீடு சட்டரீதியாக செல்லத்தக்கது. இந்த மேல்முறையீடு, மேல்முறையீட்டார் ஆலையை மூடும்படி **TNPCB** பிறப்பித்த 12.04.2018 மற்றும் 23.05.2018 மற்றும் 28.05.2018 தேதிகளில் பிரிவு **31B** காற்றுச்சட்டம் பிரிவு **33B** நீர் சட்டம் மற்றும் பிரிவு **16(c)** மற்றும் **16(f) NGT Act 2010**-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் பேரில் ஏற்பட்ட

மேல்முறையீடுகளாகும். 09.04.2018 தேதி ஆணையின் மீது செய்யப்பட்ட மேல்முறையீடு பிரிவு **31** காற்றுச்சட்டம் மற்றும் பிரிவு **28** நீர் சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு ஆணையத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. ஆனால் மேல்முறையீடு ஆணையம் அந்த மேல்முறையீட்டை பரிசீலிக்க முன்வராத நிலையில் மற்றும் அதை தன்பால் தீர்மானிக்க முடியாது என்று கருதிய நிலையிலும் அந்த மேல்முறையீடு பயனற்றதாக ஆகிவிட்டது. அதன் காரணம் யாதெனில் **TNPCB** எழுப்பிய ஆட்சேபணையின் காரணமாக மற்றும் மாநில அரசு 28.05.2018 தேதியில் பிறப்பித்த உத்தரவின் காரணமாகவும் ஏற்பட்டது. மேலும் ஒரு நபருக்கு இரண்டு இடத்தில் பரிகாரங்கள் கிடைக்கும் நிலையில் எந்த ஒரு கூடுதல் அதிகாரம் படைத்த தீர்ப்பாணையம் வழக்கை எடுத்துக்கொள்வதற்கு தடங்கல் செய்ய முடியாது. மேலும் கீழ் மட்ட தீர்ப்பாணையம் அந்த வழக்கை பரிசீலனை செய்ய முடியாது, மேல்நடத்த முடியாது என்ற முடிவுக்கு வந்த பின் இது ஒன்றே வழியாகும். மேலும் மேல்முறையீட்டு ஆணையமோ அல்லது இந்த தீர்ப்பாணையமோ இந்த பிரச்சனையை தீர்வு செய்யாமல் விட்டால் அதன் மூலம் மேல்முறையீட்டாருக்கு கடுமையான பின்விளைவுகள் ஏற்படும். அவர்களுடைய ஆலையை மூடப்படும். அங்ஙனம் செய்வதன் மூலம் தன்னிச்சையாக எந்தவித தகுந்த காரணங்கள் இல்லாமல் செய்யப்பட்ட காரியமாக அமையும்.

22) வழக்கினுடைய அடிதள தன்மைகளை கருதி ஆலையை மீண்டும் தொடங்குவதற்கு மற்றும் உரிமத்தை புதுப்பிக்க நிராகரிக்கப்பட்ட காரணங்கள் நியாயமற்ற காரணங்கள். அவை நிலைக்கத்தக்கதல்ல. அந்த உத்தரவு தீர்ப்பாணையம் 08.08.2013 தேதியில் முன்னர் பிறப்பித்த தீர்ப்பை உதாசீனப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இதன் விளைவு யாதெனில் ஸ்தாபனத்தின் தலைவர் **(Chairman)** தன்னிச்சையாக ஒரு மாசுபடுத்தும் தொழிற்சாலையை மூடுமாறு உத்தரவிடலாம். உடனே நடவடிக்கை எடுக்க காலதாமதம் ஆகும் காரணத்தினால் சுற்றுசூழல் பாதிக்கப்படும் எனும் பட்சத்தில் அந்த நடவடிக்கை எடுக்கலாம். மேலும் ஒரு தொழிற்சாலையை மூடுவதென்பது கடைசி முடிவாக செய்ய வேண்டிய காரியத்தை அதுவும் சில பாதுகாப்பு கட்டுப்பாடுகளை முன் வைத்த பின் மேலும் அந்த ஆலை நடத்துவதன் மூலம் பயன்கிடையாது என்ற நிலையை எட்டியபின் செய்ய வேண்டிய காரியம். ஒரு ஆலையை மூடுவது ஒரு உரிமைச்சாவை ஏற்படுத்தும் **(Civil Death)** என்று இந்த தீர்ப்பாணையம் 08.08.2013 தேதியில் குறிப்பிட்டுள்ளது (அது மேலே சொல்லப்பட்டுள்ளது). ஒரிசா உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளையும் முன்தீர்ப்பில் இந்த தீர்ப்பாணையம் காட்டி வழக்கை தீர்மானித்துள்ளது. **Animal Feeds Diaries and Chemicals**

**Limited Vs Orissa State (PCB) (1994 SCC On Line Orissa 81)** அந்த வழக்கில் மாசு ஏற்படுத்துவது ஒரு நிரூபிக்க வேண்டிய சாட்சிய நிலையாகும். சந்தேகத்தின் பேரில் மட்டும் ஆலையை மூடுவது ஒரு தவறான முன் உதாரணமாகும். எந்தஒரு ஆணை தற்பொழுது தவறான தீர்மானிக்கப்பட்டதாக பரிசீலிக்கப்படுகிறதோ அந்த ஆணை சில நபர்கள் கெட்ட எண்ணம் கொண்டு போராட்டத்தின் காரணமாக அளிக்கப்பட்ட முடிவாகும். 24.03.2018 தேதியில் நடைபெற்ற போராட்டம் மூலம் 09.04.2018 தேதியில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 23.05.2018 தேதியில் பிறந்த உத்தரவு போராட்டகாரர்கள் 22.05.2018 தேதியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் காரணமாக 13 நபர்கள் உயிரிழந்த நிலையில் ஏற்பட்டது. நிரந்தரமாக மூடவேண்டும் என்ற ஆணை அந்த சம்பவத்தினால் ஏற்பட்டது என்பது பொது மக்களிடம் உயர் அதிகாரிகள் சொன்ன விவரங்களை கொண்டும் அதில் முதல்மந்திரி சொன்ன விவரங்களை கொண்டும் அறிய முடிகிறது. திடீரென்று ஒரு பெரிய உலோக தொழிற்சாலையை மற்றும் இராசாயண தொழிற்சாலையை மூடுவதும் மற்றும் அதை இலச்சினை **(Seal)** வைப்பதும் ஒரு தவறான நடவடிக்கையாகும். அப்படி செய்யக்கூடிய காலத்தில் அவசரதேவைகளுக்கு தேவையான மின்சாரம் கூட துண்டிக்கப்பட்டு ஆலையை பாதுகாப்பு செய்ய தகுதி படைத்த தொழிலில் பயிற்சி பெற்ற நபர்கள் ஆலையினுடைய பாதுகாப்பு மற்றும் ஆலையை ஓட்டக்கூடிய தன்மையை பாதுகாத்தல் மற்றும் ஆலையினுடைய உபகரணங்கள் மற்றும் இதர சொத்துக்கள் தேவையற்ற வகையில் இயற்கையினுடைய சீற்றத்தின் முன் வைப்பதன் மூலம் அந்த சுற்றுபுற இடங்களில் வசிக்கும் மக்களுடைய உயிர்களுக்கும் ஒரு பெரிய ஆபத்தை உண்டுபண்ணுவதாகும்.

23) எந்தெந்த குறிப்பிட்ட காரணங்களால் இந்த ஆணையின் மீது மேல்முறையீட்டார் தங்கள் கட்சியை முன் வைக்கிறார்கள் என்பதை கீழ்கண்டவை தெரிவிக்கும்.

<u>அ) நிலத்தடி நீர் பகுத்தாய்வு அறிக்கை:-</u>

1) மாதிரிகள் **TNPCB** ஆய்வகத்தில் அவர்களாலேயே சேகரிக்கப்பட்டு கூராய்வு மூலம் பரிசீலிக்கப்பட்டு அதன் அறிக்கைகள் **TNPCB**-லேயே கிடைக்கின்றன. மேல் மனுதாரருடைய செயல்பாடுகள் எந்தவிதத்திலேயும் நிலத்தடி நீரின் தன்மை எந்தவித விரோதமான விளைவுகளும் ஏற்படுத்தவில்லை. ஆகையால் இந்த காரணம் கொண்டு ஆலையை மூடியது நியாயப்படுத்த முடியாது.

B) தாமிர கசடுகளை அகற்றுதல்:

**ii**. தாமிர கசடுகள் **CPCB**யின்படி எந்தவித ஆபத்தையும் விளைவிக்காது. அதைக் கொண்டு பள்ளமான இடங்களை நிரப்புவதற்கு உபயோகிக்கலாம் மற்றும் சாலைகள் போடுவதற்கு. மேலும் சிமெண்டின் உபயோகத்தின் மற்றும் காண்கிரிட் கலவையாக பயன்படுத்தப்படுகிறது. இரும்பு தாதுடன் சேர்ந்த மண்ணானது **(Ferro Sand)** அதிக கொள்ளளவு மற்றும் குறைவான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கழிவாக **Hazardous Wastes (Management, Handing and Transboundary Movement)** விதிகள் 2008 மற்றும் 2016ன் கீழ் கருதப்படுகிறது. **Indian Toxicology Research Centre (ITRC)** (இந்திய விஷத்தன்மை ஆராய்ச்சி மையத்தின் சுருக்கு அறிக்கைகளின்படி மற்றும் **(Central Road Research Institute (CRRI)**, மற்றும் **National council for Cement and Building Materials** மற்றும் **National Environment Engineering Research Institute (NEERI)** முதலிய ஸ்தாபனங்களின் சுருக்கு அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் எந்தெந்த நில உடைமைதாரர்களுக்கு தாமிர கசடு விற்கப்பட்டு இருக்கிறதோ, அவற்றை அகற்றுமாறு அந்த நில உடைமைதாரருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த காரணத்தினால் ஆலையை மூடியது நியாயப்படுத்த முடியாது.

C. ஆபத்தான பொருட்களை கையாளுதல்:

**iii**. மேல்முறையீட்டார் **Hazardous Wastes (Management, Handing and Transboundary Movement)** விதிகள் 2008 மற்றும் 2016ன் கீழ் விண்ணப்பம் செய்துள்ளார்கள். அந்த விண்ணப்பம் **TNPCB**யில் நிலுவையில் உள்ளன. மேல்முறையீட்டார் இந்த விஷயத்தில் எல்லாவித மேல் நடவடிக்கைகளும் விதிகளுக்கு உட்பட்டு எடுத்து வருகிறார்கள். அந்த காரணம் கொண்டும், ஆலையை மூட நியாயப்படுத்த முடியாது. மேலும் மேல்முறையீட்டாருக்கு மேல் நடவடிக்கை எடுக்க அங்கீகாரம் தேவைப்படுகிறது.

D. காற்றினுடைய சுத்தத் தன்மை குறித்த விவரங்கள்:

**iv**) மேல்முறையீட்டார் சுற்றுசூழல் காரணமாக ஏற்படும் விவரங்கள் அடங்கிய அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. மேல்முறையீட்டார் வீசக்கூடிய காற்றினுடைய தன்மையை ஆராய்ந்து மாதா மாதம் **TNPCB**க்கு அறிக்கைகள் அனுப்புகிறார்கள். மேலும் ஆலையானது **NEERI**-னால் காற்று

மாசு விவரம் ஆய்வு செய்யப்பட்டது. அவர்கள் உலோக கூட்டுத்தன்மையை (**Concentration**) ஆராய்ந்து எங்ஙனம் அதன் தன்மை இருக்க வேண்டுமோ அந்த தன்மை இருப்பதாக அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளார்கள்.

**E.** ஜிப்சம் குட்டை

**v)** **CPCB** அவர்களுடைய பரிந்துரைப்படி மேல்முறையீட்டார் செப்டம்பர் 2019 வரை அவர்களது உற்பத்தியை தொடர்ந்து நடத்தலாம் என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் தற்பொழுது கையாளப்படும் பாஸ்போ ஜிப்சம் சேமிப்பை அதுபோல தொடர்ந்து செய்து வரலாம் என்று கூறியுள்ளார்கள். ஜிப்சம் குட்டையானது மாற்றப்பட்ட விதிகளின்கீழ் புதிதாக கட்டப்பட்டு செப்டம்பர் 2019 வரை நீடித்து கொடுக்கப்பட்டுள்ளது. **HDPE-**யினுடைய புதிய பரிந்துரைகளின்படி அதன் கணத் தன்மை 1.5 **mm-**ஆக மேல் மூடுதல் நிலை இருக்க வேண்டும். இதன் காரணமாக புதிய ஜிப்சம் குட்டை தற்பொழுது நிர்ணயிக்கப்பட்ட பரிந்துரைகளின்படி கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

24. மேல்முறையீட்டாரின் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர், மேல்முறையீட்டார் சுமார் 3000 கோடி ரூபாய் இந்த தொழிற்சாலை நிறுவுவதற்காக செலவு செய்யப்பட்டதாகவும், மேலும் அதில் 500 கோடி ரூபாய் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வகைக்காக செலவு செய்ததாகவும், இந்த ஸ்தாபனம் தனி நிலையிலேயே 35-40% இந்தியா உடைய தாமிர உற்பத்தி தேவையை பூர்த்தி செய்வதாகும். மேலும் 60% தாமிர உற்பத்தி உள் நாட்டு சந்தையில் தேவைகளுக்கு ஈடு செய்வதாகவும், பாக்கி 40% ஏற்றுமதி வகைக்காக தாமிர உற்பத்தி ஈடு செய்வதாகும் வாதாடினார். இந்த ஆலை மூடியதன் காரணமாக இந்தியாவினுடைய தாமிரத்தின் விலை 10 முதல் 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளதாகவும். மேலும் கந்தக அமில விலையேற்றம் 6 மடங்கிற்கு மேல் ஏற்றம் ஏற்பட்டு ரூ.2,500/- லிருந்து ரூ.16,000/- ஒரு மெட்ரிக் டன்னிற்கு விலை ஏற்றம் ஏற்பட்டதாக கூறுகிறார். மேல் முறையீட்டார் சுமார் 3500 முதல் 4000 வரை நபர்களை நேரடியாக வேலைக்கு அமர்த்துவதாகவும், இதில் ஒப்பந்த தொழிலாளர்களும் உட்பட்டவர்கள் என்றும், மேலும் சிறு தொழில்கள் கப்பல் ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், கப்பல் சத்தம் ஈட்டு கொடுப்பவர்கள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடுவர்கள் போன்றவர்கள் இந்த ஆலையை நம்பி வாழ்கிறார்கள். மறைமுகமாக இந்த ஆலை சுமார் 20000 நபர்களுக்கு மேல் சிறு தொழில்கள் மற்றும் அந்த தொழில்களை நம்பி வாழ்வோர்களையும் வாழ வைக்கிறது. இந்த ஆலையினால் மத்திய அரசாங்கத்திற்கும், மாநில அரசாங்கத்திற்கும் கலால்

வரி, மற்றும் கஸ்டம்ஸ் வரி மற்றும் வருமான வரி மற்றும் **VAT** வரி போன்றவை சுமார் 2000 கோடி ரூபாய் பொருள் ஈட்டித் தருவதாகும். மேலும் தூத்துக்குடி துறைமுகத்தினுடைய 30 சதவிகித ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் சாதக, பாதக நிலையை தாங்குவதாகவும், மற்றும் தூத்துக்குடி துறைமுகத்தின் 12% வருமானத்தை பாதுகாப்பதாகவும், இந்த மேல்முறையீட்டாருடைய ஆலையை மூடியதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 5 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாகவும் வாதாடினார்.

25. இந்த வழக்கு வாதுரை நடந்து கொண்டிருக்கும் காலத்தில் மூத்த வழக்கறிஞர் **C.A.**சுந்தரம் அவர்கள் மேல்முறையீட்டாருக்காக, ஒரு அறிக்கை கொடுத்தார். அது யாதெனில் **CSR** நடவடிக்கை வகைகளுக்கு மேல்முறையீட்டார் ரூ.10 கோடி ஆண்டொன்றுக்கு செலவு செய்ததாகவும், மேலும் மேல்முறையீட்டாருக்கு அறிவுரை கொடுத்து ரூ.100 கோடி வரை வருடத்திற்கு, அந்த வாழும் மக்களின் நன்மையை கருதி அவர்களுடைய நல்லெண்ணத்தை பெறும் வகையிலும், செலவு செய்ய அறிவுரை கொடுத்ததாக கூறினார். இந்த தொகை தூத்துக்குடியினுடைய தண்ணீர் தேவைகள் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் மற்றும் மக்களுக்கு தொழில் முன்னேற்ற பாதை பழக்கத்தை ஏற்படுத்துவதற்கும், அவர்களுடைய வளர்ச்சியையும் கருத்தில் கொள்வதாகும் வாதுரை முன் வைத்தார். மேலும் தமிழ்நாட்டினுடைய கடல் கரையோரத்தில் உயர்மட்ட **TDS** தண்ணீரில் உள்ளது. அதில் ஜிப்சத்தை கடலில் கொட்டி தேவைக்கேற்பட்ட வகையில் ஒன்றுக்கு ஒன்று என்ற விகிதாசாரத்தில் செய்ய ஒப்புக்கொண்டு, மேலும் உபயோகிக்க லாயக்கில்லாமல் இருக்கும் ஜிப்சம் சரக்குகளை ஏற்கனவே பதப்படுத்தி அவற்றை கடின பொருளாக ஆக்கி அவை இனி எந்த வகையிலும் ஆபத்தான விளைவுகளை செய்யாத நிலையிலும் செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலையை சுற்றி ஒரு பசுமை வளையம் தற்பொழுது பராமரிப்பு செய்தாகவும், அந்த வகையில் உச்ச நீதிமன்றத்தினுடைய உத்தரவிற்கிணங்க நடந்து வருவதாகவும் கூறினார். புகைப்போக்கி உயரம் தகுந்த அளவிற்கு உள்ளதாகவும், அதனால் இரண்டு புகை கூண்டு **TNPCB**-யினுடைய உத்தரவிற்கிணங்க வைக்கப்பட்டுள்ளதாகும் வாதிட்டார்.

26. உரிமத்தை புதுப்பிக்காத காரணமும் மேலும் தொழிற்சாலை மூடும்படியாக கொடுத்த அறிக்கையும் இரண்டுமே பொதுவான ஒரு உத்தரவு. கமிட்டியினால் இந்த பொதுவான உத்தரவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதை மேல்முறையீட்டாரின் கற்றறிந்த வழக்கறிஞர் முன்வைத்தார். நீர்

அறிக்கையை பொருத்து மட்டும் கமிட்டியினால் கீழ்கண்டவாறு கூறப்பட்டது. எந்த காரணத்தினால் நீர்நிலையைப் பற்றி உள்ள தரைமட்ட தண்ணீர் பற்றிய பகுத்தாய்வு அறிக்கை ஏன் கொடுக்கப்படவில்லை என்பது பற்றி மேலமுறையீட்டாளருக்கு அறிவிப்பு ஏதும் கொடுக்கப்படவில்லை. கமிட்டியே தன்நிலையில் தாமிர கசடு எந்த விதத்திலும் ஆபத்தை விளைவிக்கக்கூடியதல்ல மற்றும் ஊடுருவு கரைசல் அல்ல மற்றும் அதை சேமிப்பதால் எந்தவித அடித்தள தண்ணீருக்கு பாதகம் ஏற்படுத்தும் வகையில் இல்லை என்பதையும் கமிட்டி தன்னுடைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளது (பத்தி 113,116,121,123).

கமிட்டி தன்னுடைய அறிவிக்கையில் ஆபத்தை விளைவிக்கும் வேண்டாத பொருட்களை கையாள்வது தொடர்பாக கூறுகையில் **TNPCB** முன்னுக்கு முரணாக கருத்து தெரிவித்துள்ளார்கள். ஒரு நிலையில் ஆபத்தை விளைவிக்கும் வேண்டாத பொருட்களை கையாள்வதற்காக கொடுத்த விண்ணப்பத்திற்கு அனுமதி 58 மாதத்திற்கும் மேலாக கொடுக்காமல் அவர்கள் மேல்முறையீட்டாரை குறை கூறுகிறார்கள் (பத்தி 161). காற்றில் கலந்துள்ள கனரக உலோகங்கள் காற்றினுடைய தன்மையை எங்ஙனம் பாதித்துள்ளது என்பது பற்றி ஒரு ஆய்வு நடத்தும்படியாக **TNPCB** மேல்முறையீட்டாரை எந்த காலத்திலும் செய்ய சொல்லவில்லை. இது சம்பந்தமாக காற்றினுடைய தன்மை அறிக்கை **TNPCB** க்கு மேல்முறையீட்டார் கொடுத்துள்ளார்கள் (பத்தி 133). ஜிப்சம் குட்டை **CPCB** வரையறுத்துள்ள கட்டுப்பாடுகளில் கம்பெனிக்கு அக்டோபர் 2019 காலம் வரை அவகாசம் உள்ளது. கம்பெனிக்கு அடித்தள தண்ணீர் மாசு ஏதும் ஏற்படவில்லை (பத்தி 143).

27. தற்போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை என்ற நிலைபாடு இருந்த போதிலும் கமிட்டியானது சில விவரங்களை ஆராய்ந்துள்ளார்கள். இந்த வழக்கில் மூன்றாவது நபர்கள் தலையிட்டால் எழுப்பிய சில கருத்துக்கள் தற்போது பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நியாயமான முறையில் பரிசீலிக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்தும் நிலையில் இல்லை. 1997 மற்றும் 2013ல் ஏற்பட்ட வாயுக்கசிவு சம்பந்தமான புகார்கள் உச்சநீதிமன்றத்தால் கொடுத்த தீர்ப்பு **in Sterlite Industries (Supra) 2013 (4) SCC** 575 மற்றும் தீர்ப்பாயம் 08.08.2013 ல் பிறப்பித்த உத்தரவிலும் முன்னரே தீர்மானித்த காரணத்தினால் அதை மீண்டும் கமிட்டி எடுத்து ஆராயவில்லை. சுகாதார நிலையை பற்றி கூறும்பொழுது எந்த வேலை செய்யும் நபருக்கும் அல்லது சுற்றியுள்ள

கிராமங்களில் வசிப்பவர்களுக்கு மேல்முறையீட்டார் தொழில் நடத்தினால் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டது என்பதற்கு எந்தவித சாட்சியமும் இல்லை. காற்று மாசுபட்டது மற்றும் புகைக்கூண்டு உயரம் அதைப்பற்றி சொல்லும் இடத்தில் வெளியேற்றப்படும் காற்று எந்த நிலைக்கு உகந்ததோ அந்த நிலைக்கு தான் வெளியேற்றப்படுகிறது என்பதை கமிட்டி தன்னுடைய 27.02.2018 அறிக்கையில் கூறியுள்ளது. தண்ணீர் மாசுபட்டுள்ளதா என்பதை பற்றி கூறுகையில் எந்த அளவிற்கு மாசு நிர்ணயம் இருக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கிறதோ அந்த அளவிற்கு உட்பட்டு தான் இருந்து வருகிறது என்பதைப் பற்றி கமிட்டி அறிக்கை கொடுத்துள்ளது. **TDS** யை பொறுத்தமட்டும் சற்று உயர்வாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

28. கற்றறிந்த மேல்முயைீட்டார் மூத்த வழக்கறிஞர் கூடுதல் **TDS** ஏற்படுவதற்கு மேல்முறையீட்டார் எந்த விதத்திலும் பொறுப்பாளி அல்ல என்பது பற்றி தன் கட்சி முன் வைத்தார்கள் மூத்த வழக்கறிஞரால் கடைசியாக **Central Ground Water Board** இது சம்பந்தமாக ஒரு ஆய்வு செய்து அறிக்கை சமர்பித்துள்ளது. அந்த அறிக்கையில் தென்கிழக்கு **Coastal Region (Ground Water Board sampling and analysis conducted by CGWP, SECR, Chennai in and around SIPCOT Industrial complex, July 2018)** என்பதில் மேல்முறையீட்டார் மேல்மட்ட நிலையில் அவர்களது தொழிற்கூடம் அமைந்துள்ளது அப்படி இருந்தும் **TDS** கூடுதலாக இருந்தது என்பது பற்றி விளக்கினார். மேலும் புகைக்கூண்டு உயரத்தை **(Stack height)** கூட்ட வேண்டும் என்பது பற்றி கூறுகையில் அங்ஙனம் உயரத்தை கூட்டும் வரை உற்பத்தி திறனை கூட்டக்கூடாது அல்லது உற்பத்தியை குறைக்க வேண்டும் என்ற நிலைபாடு சரியான நிலைபாடு அல்ல என்று கூறினார். அது எப்படி இருப்பினும் எந்த உத்தரவின் பெயரில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்தோ அந்த உத்தரவுகளை செல்லத்தக்கதல்ல என்று இந்த பசுமைத்தீர்ப்பாயம் உத்தரவிட வேண்டும் என்றும் மற்றும் இது சம்பந்தமாக **TNPCB** முடிவெடுத்துக்கொள்ளலாம் என்பது பற்றி கூறினார். மேல்முறையீட்டார் வழக்கறிஞர் கமிட்டியினால் சொல்லப்பட்ட இதர பரிந்துரைகளுக்கு எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

<u>எதிர்மனுதாரர்களின் கட்சி விவரங்கள்</u>

29. தமிழ்நாடு அரசு மற்றும் **TNPCB** மூத்த வழக்கறிஞர் மேல்முறையீடு ஏற்கதக்கதல்ல? என்பதையும் மற்றும் வழக்கினுடைய தன்மை கருதியும் இந்த மேல்முறையீடு ஏற்கத்தக்கதில்லை என்ற வாதத்தை முன் வைத்தார்.

09.04.2018 தேதியில் பிறந்த உத்தரவின் மீது மேல்முறையீடு, மேல்முறையீட்டு ஆணையத்தில் தான் மேல்முறையீடு செய்ய வேண்டும். தற்பொழுது உள்ள நிலையில் மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் போதே மேல்முறையீட்டார் இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு ஆணையத்தில் மட்டுமே இந்த மேல்முறையீடையும் சேர்த்து கேட்க வேண்டும் என்று உத்தரவிட முடியும். அது தான் கூடுதலாக பிறப்பிக்கக்கூடிய உத்தரவாக இருக்க முடியும்.

30. பின் பிறப்பித்த 12.04.2018 உத்தரவு தற்பொழுது தன்நிலையில் நிலுவையில் இல்லை. அதன் காரணமாக உரிமத்தை புதுபித்துக் கொடுக்க வேண்டும் என்ற பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல. அதனால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும். 09.04.2018 உத்தரவு மேல்முறையீட்டு ஆணையத்தால் தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் தான் 12.04.2018 மற்றும் 23.05.2018 உத்தரவுகள் செல்லத்தக்கதல்ல என்ற வாதத்தை எழுப்ப முடியும். எந்த நிலையிலும் தமிழக அரசு 28.05.2018 தேதியில் பிரிவு **18(1)(b)** நீர் சட்டத்தின் கீழ் பிறப்பித்த உத்தரவை இந்த பசுமை தீர்ப்பாணையத்தின் முன் செல்லத்தக்கதல்ல என்று கூறி மேல்முறையீடு செய்ய முடியாது. அதன் காரணம் என்னவென்றால் அந்த உத்தரவு ஒரு கொள்கை ரீதியான மாநில அரசாங்க உத்தரவே தவிர அதை இந்த பசுமை தீர்ப்பாணையம் தன்னுடைய மேல்முறையீட்டு அதிகாரத்தின் கீழ் வராத நிலையில் தீர்மானிக்க இயலாது. ஆலையை மூடும்படியாக **TNPCB** பிறப்பித்த உத்தரவு அரசாங்க உத்தரவை அனுசரித்து பிறந்த உத்தரவாகும். அதையும் இந்த மேல்முறையீடு மூலமாக இந்த பசுமை தீர்ப்பாணையத்தில் செல்லத்தக்கதா என்ற பரிகாரம் கோரமுடியாது. இதற்கு சாதரணமாக **Edukanti Kistamma Vs Venkatareddy 2010 (1) SCC 756, Para 22** என்ற தீர்ப்பு முன் வைக்கப்பட்டது.

31. தமிழ்நாடு அரசினுடைய கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் மேலும் வைத்த வாதம் என்னவென்றால் கமிட்டியினுடைய அறிக்கை தங்களை தானே நீதிமன்றம் செய்ய வேண்டிய அதிகாரங்களை தன் அதிகாரமாக எடுத்துக்கொண்டுள்ளது. இதுவும் சட்டரீதியாக செல்லத்தக்கதல்ல. இந்த நிலையை நிலைப்படுத்த **Jamal Uddin Ahmad Vs Abu Saleh Najmuddin** மற்றும் பலர் **2003 (4) SCC** பக்கம் 257 பத்தி 14 என்ற தீர்ப்பை காட்டி தன் வாதத்தை முன் வைத்தார். மேலும் **State of West Bengal Vs Subhas Kuamr Chatterjee** மற்றும் பலர் **2010 (11) SCC** பக்கம் 694 பத்தி 9, 20, 21, 25 மற்றும் 27 ஆகியவற்றையும் முன் வைத்தார். மேலும் **Padam Sen &**

**Anr Vs State of UP 1961 (1) SCR 884** மற்றும் **Amiya Bala Paul Vs Commissioner of Income Tax Shilong 2003 (6) SCC 342, Para 15** என்பதையும் மேற்கோள் காட்டினார்.

32. வழக்கினுடைய தன்மையை பற்றி கூறும் போது தாமிர கசடு உப்பார் ஆற்றினுடைய அடிமணல் பகுதியில் சேர்ந்திருப்பதாகவும், அதனால் உப்பார் ஆறு மாசுபட வாய்ப்பிருப்பதாகவும் வாதித்தார். **Gypsum** குட்டை **Leachate (Water that has percolated through a solid and leached out some of the constituents)** உற்பத்தி செய்யும் அதன் காரணமாக மழை காலத்தில் பூமியினுடைய தண்ணீர் மாசுபட வாய்ப்பு ஏற்படுத்தும் என்றும் வாதித்தார். மேலும் மேல்முறையீட்டாரின் ஆலை ஒரு **ZLD** யூனிட் **(Zero Liquid Discharge)** அதன் காரணமாக உற்பத்தி செய்யும் காலத்தில் வெளியேற்றம் இல்லாத நிலையிலும் கழிவு பொருளை சேமித்து வைக்கும் காலத்தில் கசிவுகள் வெளியேற வாய்ப்புண்டு என்றும் வாதித்திட்டார். மேலும் குறிப்பிட்ட அளவிற்குட்பட்டு மாசு நிலை இருந்த பொழுதிலும் அது கசிவு ஏற்படுத்துவதற்கு வாய்ப்புள்ளதாகவும் அதன் காரணமாக தண்ணீர் மாசுபாடும் வாய்ப்பு பள்ளமான பகுதிகளை நிரப்புவதன் மூலம் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதை கருத்தில் ஏற்றுக்கொள்ளமல் இருக்க முடியாது என்ற வாதமும் முன் வைக்கப்பட்டது. ஜிப்சம் என்பது தண்ணீர் கரையக்கூடியது. **TDS** ஒரு நிலைப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட அளவிற்கு மேல் இருப்பதையும் சுட்டி காட்டினார்.

33. **TNPCB** ஒப்புதல்படி தண்ணீரினுடைய தன்மை குறித்து ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பது விதி. அங்ஙனம் செய்யாத காரணத்தினால் கேள்விக்குரிய உத்தரவு **Impugned Order (dispute the truth, validity, or honesty of (a statement or motive) call into question)** நியாயப்படுத்தினார். அந்த செயல்பாடை புறக்கணித்த காரணத்தினால் மேலும் ஒரு அறிவிப்பு கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அதன் காரணமாக ஒப்புதலை புதுப்பிக்க இயலவில்லை. இந்த விவரம் மேல்முறையீட்டார் நிறுவனத்திற்கு நன்கு தெரியும். மேலும் கமிட்டியினுடைய கருத்தானது மேல்முறையீட்டாருக்கு சாதகமாக இருப்பது சட்டரீதியாக எந்தவித அடிப்படை நிலையிலும் ஏற்கத்தக்கதல்ல. மேலும் கமிட்டியினுடைய கருத்துக்கள் அதற்கு கொடுக்கப்பட்ட அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டதாகும். அந்த நிலையில் மேல்முறையீட்டாரின் அடிப்படை வாதம் ஏற்கத்தக்கதல்ல என்பதையும் முன்வைத்தார்.

34. தாமிர கசடை பொருத்தமட்டில் அது ஓடையினுடைய தண்ணீர் போக்கை தடுக்கிறது. ஆற்றுக்கும் தாமிர கசடுகளை வைத்து நிரப்பி உள்ள இடத்திற்கும் சுற்றுச்சுவர் முழுமையாக கட்டப்படவில்லை. மேலும் கமிட்டியானது தடுப்புச் சுவர் முழு விஸ்தீரணத்துக்கும் கட்டப்படுவதற்கு அவகாசம் கொடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளது. ஆனால் இது தேவையற்ற கமிட்டியின் பார்வையாகும். இதற்குமுன் பலமுறை அறிவிப்புகள் பல சந்தர்ப்பத்தில் முன்னர் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த முறை தொழிற்சாலை மூடும்படியாக பிறப்பித்த உத்தரவு மிக கடினமான ஒன்று என்பது ஏற்கத்தக்கது இல்லை. கம்பெனியானது தாமிர கசடை எங்ஙனம் வெளியேற்ற வேண்டும் என்பதற்கு, அங்ஙம் செய்வதற்கு முன் உத்தரவு பெற்றிருக்க வேண்டும். அங்ஙனம் அவர்கள் உத்தரவு பெறவில்லை. கசடுகளை கொட்டியது **TNPCB** ஒப்புதல் விதிக்கு முரணானது.

35. மூன்றாவதாக கட்சி செய்வது யாதெனில், ஆபத்தை விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தி செய்வதற்கும், மற்றும் அவற்றை கையாள்வதற்கும் ஒப்புதல் கொடுத்த காலம் முடிவடைந்து விட்டது. அந்த விபரத்தை தான் தற்பொழுது செல்லத்தக்கது அல்ல என்று சொல்லக்கூடிய ஆணை நியாயப்படுத்துகிறது. வாரியத்திடம் கொடுக்கப்பட்ட விண்ணப்பம் பைசல் செய்யப்படாமல் நிலுவையில் உள்ள ஒரே காரணத்தைக் கொண்டு, மேல் முறையீட்டார் மேலும் மேலும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய கழிவுகள் அவற்றை உற்பத்தி மற்றும் கையாள்வது போன்றவைகளை மனுவை பைசல் செய்யும் காலம் வரை செய்யாமல் இருந்திருக்க வேண்டும். விண்ணப்பம் கொடுக்கப்பட்டு தீர்வு செய்யப்படாத நிலையில் தங்கள் நடவடிக்கையை தொடர்ந்து இருக்க கூடாது. முன் காலங்களில் இது போன்று தொழிற்சாலை மூட உத்தரவு பிறப்பிக்காத காரணத்தை முன் வைத்து தங்களது நடவடிக்கையை தொழிற்சாலை மேலும் தொடர்ச்சியாக செய்து கொண்டிருக்க கூடாது.

36. மூடுவதற்கு நான்காவது காரணம் என்னவென்றால், மேல்முறையீட்டார் காற்றினுடைய கன உலோகங்கள் எங்ஙனம் காற்றில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோலில் கலந்துள்ளன என்பது பற்றி ஒரு ஆய்வறிக்கை. வாரியத்தின் ஆய்வகத்திலிருந்து பெற்றிருக்க வேண்டும். அப்படி வாரியத்தின் ஒரு ஆய்வகம் இல்லாத நிலையில் அவர்கள் **MoEF&CC/NABL** போன்ற அங்கீரிக்கப்பட்ட ஆய்வகங்களை உபயோகித்து, அவர்களுடைய சேவைகளை பெற்றிருக்கலாம். கமிட்டியினுடைய அறிக்கையில் **TNPCB** எந்தெந்த ஆய்வகங்களில் சோதனைகள் செய்யலாம்

என்பது பற்றி தெரிவிக்காத காரணத்தை காட்டி, அதை ஒரு கேடயமாக பயன்படுத்த முடியாது.

37. மேலும் ஜிப்சம் குட்டை கட்டாத காரணத்தினால் 5வது காரணமாக தொழிற்சாலை மூடப்பட்டது. அதுவும் தெளிவர நிரூபிக்கப்பட்டது. ஜிப்சத்தை சேமிப்பாக வைத்துக் கொள்வதன் மூலம் அடித்தள தண்ணீர் மாசுபடாது என்ற கூற்று ஒப்புக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல. ஜிப்சம் குட்டையிலிருந்து ஏற்படக்கூடிய கசிவுகள் **Leachate** நீர் நிலையை பாதிக்காது என்று கூறுவது ஒப்புக்கொள்ள இயலாது. ஜிப்சம் குட்டையிலிருந்து வெளியேறக்கூடிய கசிவுகள் மாதிரிகளை பரிசீலனை செய்யும் போது தெரியவருகிறது. மேலும் கூட்டாக வைக்கப்பட்டிருக்கும் ஜிப்சமானது காலக்கட்டத்தில் இறுகிவிடும். அந்த காரணத்தினால் தண்ணீர் மாசுபடாது என்ற வாதம் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது. மேலும் அங்ஙனம் சேமித்து வைக்கப்பட்டுள்ள ஜிப்சமானது தற்பொழுது எடுக்கப்பட்டுவிட்டது என்பது போதுமானதாக கருத முடியாது. ஜிப்சம் கசிவுகள் அமிலத் தன்மை வாய்ந்தவை. அவைகள் சுற்றுப்புற இடங்களில் கசிந்து மாசுப்படுத்த வாய்ப்புண்டு.

38. மேலும் கமிட்டி ஆலையை சுற்றி நல்ல முறையில் பசுமைப்படுத்தவில்லை என்று அதிருப்தி தெரிவித்துள்ளது. ஆலையை தொடர்ந்து நடத்துவதற்கு உரிமத்தை இது புதுப்பித்துக் கொடுக்காத ஒரு காரணமாக கூறப்படவில்லை. மேலும் கமிட்டியானது. முந்தைய காலத்தில் இந்த தீர்ப்பாணையம் 08.08.2013ல் பிறப்பித்த உத்தரவின்படி **TNPCB** மற்றும் மாநில அரசாங்கம் எந்த வழியில் சுற்றுச்சூழல் எந்தளவிற்கு மாசுப்படுகிறது மற்றும் மக்களின் சுகாதாரம் குறித்து ஆய்வு செய்யவில்லை என்று கூறியுள்ளது. இந்த காரியம் கம்பெனியால் செய்து முடிக்க வேண்டிய பொறுப்பு. மேலும் கம்பெனி தாமிர தூசி தாது உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது. அதனால் கூடுதல் புகை மற்றும் கூடுதல் தாமிர கசடு மற்றும் ஆபத்தை விளைவிக்கும் கழிவு பொருட்கள், தரைமட்ட தண்ணீர் மாசடைய வாய்ப்புள்ளது. மேலும் சரக்கை கொண்டு செல்லும்போது உடல்நலனை பாதிக்கும் அளவிற்கு உள்ளது. கமிட்டியானது புகை கூண்டை மேலும் உயர்த்துவதற்கு தேவை என்று கண்டுள்ளது. கமிட்டியானது மேல்முறையீட்டார் எந்த இடத்தில் காற்றினுடைய நிலை விவரங்களை எடுக்கிறார்களோ, அந்த இடத்தில் அவர்களுக்கு தெரிவிக்காமல் மாதிரி எடுத்தது நியாயமற்ற செயல் என்பதாகும். இங்ஙனம் அறிவிப்பு இல்லாமல் செய்வதற்கு **TNPCB-**க்கு சட்ட ரீதியாக அதிகாரங்கள் உண்டு. அதனால் அறிவிப்பு கொடுக்க தேவையில்லை.

39. ஜிப்சம் குட்டையில் இருந்து மாசு வெளிப்படுகிறது என்பது ஒருவித அச்சமனப்பான்மை என்பது தவறு. **TNPCB** கமிட்டியிடம் சமர்ப்பித்த 27.10.2018 அறிக்கை மாசுகளை காட்டுகிறது. அவை கனத்த உலோகங்கள் உயர்ரக **TDS** குளோரைடு மற்றும் சல்பேட் மற்றும் கடின பொருட்கள் மற்றும் கால்சியம் ஆகியவை உற்பத்தி செய்யப்பட்ட பின்னர் அந்த கழிவு நீரிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட கழிவில் உள்ளது. மேலும் **TNPCB** கமிட்டியிடம் அடிமட்ட தண்ணீர் மாசுபட்டிருக்கிறது என்று கூறியதை கமிட்டியினுடைய அறிக்கை வெளிப்படுத்தப்படவில்லை.

40. இந்த வழக்கில் மூன்றாவது நபராக தலையீடு செய்து வைகோ புகை போக்கினுடைய உயரத்தை கூட்ட வேண்டும் அல்லது உற்பத்தியை புகை போக்கியின் உயரத்திற்கு தகுந்தார்போல் குறைக்க வேண்டும் என்று கூறினார். எந்த காரணத்தினால் எதிர்ப்பு கிளம்பியது என்றால் உடல்நல பாதிப்பு சுற்றி உள்ள வசிப்பவர்களுக்கு ஏற்பட்டது அது காற்று மாசுநிலை காரணமாகவும் மற்றும் நீர் மாசு நிலை காரணமாகவும் ஏற்பட்டது. மேலும் வைகோ அவர்கள் வாதிட்டது என்னவென்றால் தாமிரக்கசடு ஆபத்தை விளைவிக்கக்கூடியதாக இல்லாத நிலையிலும் அதை தரையில் பெரிய அளவில் சேமித்து நதியினுடைய நீரோட்டத்தை தவிர்க்கும் நிலையில் உள்ளதை ஏற்க இயலாது ஜிப்சம் குட்டையில் இருந்து கசிவு வெளியேற வாய்ப்பு உண்டு இந்த விவரத்தை கமிட்டியானது கண்டு கொள்ளாமல் அறிக்கை சமர்ப்பித்துள்ளது. **TNPCB** நிலைபாடு என்னவென்றால் தண்ணீர் பகுப்பாய்வு அறிக்கை கொடுக்கப்படவில்லை. மேல்முறையீட்டார் **Hazardous Wastes (Management, Handling and Trans boundary Movemnt) Rules, 2008 & 2016** கீழ் விண்ணப்பம் கொடுக்கப்பட்டதாகவும், ஆனால் அனுமதி கொடுக்கவில்லை. கமிட்டி இதை கருத்தில் கொள்ளவில்லை.

முடிவு நிலைபாடு விவரம்

41. எல்லா சாராருடைய பிராது விவரங்களை மற்றும் கமிட்டியினுடைய அறிக்கையினுடைய அடிப்படை விவரம் மற்றும் மாற்று கருத்துப்பரிமாற்றங்கள் அவற்றை கீழ் கண்ட எழுவினாக்கள் மூலமாக நாம் பதிலளிக்கலாம்.

- **i.** இந்த மேல்முறையீடு நிலைக்கத்தக்கதா?
- **ii.** எந்த உத்தரவுகளின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ அவற்றை வழக்கினுடைய தன்மை கருதி தகுதியற்றதா என்பதையும் பரிசிலிக்க வேண்டும்.

மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளத்தக்கதா:

42. மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்பது பற்றி கீழ்கண்ட சர்ச்சை ஏற்படுத்திய உத்தரவுகளை பின் பகுதிகளில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

09.04.2018 உத்தரவு:

இதிலிருந்து தெரியவருவது என்னவென்றால் தொழிற்சாலை முந்திய காலத்தில் புதுப்பிக்கப்பட்ட உரிமத்தின்படி கீழ்கண்ட கடைப்பிடிக்கவில்லை.

1. தொழிற்சாலையின் உட்பகுதியில் உள்ள ஆழ்கிணறு மற்றும் தொழிற்சாலை அருகில் உள்ள இடங்களிலும் மற்றும் அதை சுற்றியுள்ள நிலத்தடி தண்ணீர் ஆராய்ந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை அந்த நிலையில் நிலத்தடி தண்ணீர் எந்த வகையில் சாதகபாதகங்கள் ஏற்பட்டுள்ளன என்பது பற்றி தீர்மானிக்க இயலும்.
2. தொழிற்சாலையானது தாமிரக்கசடு கொட்டப்பட்ட இடம் மற்றும் சேமிப்பு செய்த இடம் அவற்றை உப்பாறு ஆற்றிலிருந்து மற்றும் பட்டா நிலத்தில் இருந்தும் எடுக்காத காரணத்தினால் தண்ணீருடைய நீரோட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் கம்பெனியானது உப்பாறு ஆறு மற்றும் பள்ளமான பகுதியில் கசடுகளை பட்டா நிலங்களில் நிரப்பிய இடத்திற்கும் நடுவில் ஒரு தடுப்புசுவர் கட்டி தாமிர கழிவு உப்பாறு ஆற்றை சென்றடைவதற்கு தடங்கள் ஏற்படுத்த தடுப்பு ஏற்பாடுகள் செய்யாத காரணத்தினால்.
3. தொழிற்சாலைக்கு 10.07.2008ல் கொடுக்கப்பட்ட அனுமதி 09.07.2013ல் முடிவுக்கு வந்துவிட்டது. அப்படி இருந்தும் உற்பத்தியை தொடங்கி ஆபத்தை விளைவிக்கும் பொருட்களை கையாள்தல் மற்றும் **Hazardous Wastes (Management, Handling and Trans boundary Movemnt) Rules, 2016** கீழ் தொழிற்சாலை தொடர்ந்து நடத்துவதற்கு உத்தரவு பெறாமல் மேலும் அவர்கள் கொடுத்த விண்ணப்பம் திரும்ப அனுப்பபட்டுள்ளது. அந்த மனுவில் மேலும் விவரங்கள் கொடுக்கும்படியாக கோரப்பட்டுள்ளது. அந்த விவரங்களை தொழிற்சாலையானது கொடுக்காத நிலை காரணமாகவும்.
4. புதுப்பித்தல் காலத்தில் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை தொழிற்சாலையானது ஆராய்ந்து கனத்த உலோகங்கள் எந்த வகையில் இருக்க வேண்டும் என்று பாகுபாடு செய்திருக்க வேண்டும். அவை ஆர்சனிக் போன்றவை காற்றினுடைய மாசுத் தன்மையை

வாரியத்தின் ஆய்வுக்கூடத்தில் செய்திருக்க வேண்டும். உதாரணமாக **NOx, PM 10 and SO2.** வாரிய ஆய்வுக்கூடத்தில் இந்த வசதிகள் இல்லாத காரணத்தால் கம்பெனியானது **MoEF and CC/NABL** அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக்கூடம் மூலமாக ஆய்வு செய்து அந்த அறிக்கையை வாரியத்திற்கு சமர்ப்பித்திருக்க வேண்டும். மேல்முறையீட்டார் தொழிற்கூடம் அவற்றை செய்யவில்லை மேலும் காற்று சம்பந்தமாக எந்த அளவிற்கு ஆர்சனிக் ஆகாயத்தில் கலந்திருக்கிறது என்பதை கணித்து ஒரு அறிக்கை அதிகாரபூர்வ சமர்ப்பிக்கவில்லை.

5. 22.02.2018 தேதியில் ஆய்வு செய்ததில் ஜிப்சம் குட்டை **CPCB** அறிவுரையின் படி ஜிப்சம் குட்டையை கட்ட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. அதை 31.03.2018 தேதிவரை அங்ஙனம் செய்யாமல் தொழிற்சாலை விட்டுவிட்டது. அந்த காரணத்தினால் தொழிற்சாலை கேட்ட உரிமம் வாரியத்தால் கொடுக்கப்படாமல் தள்ளுபடி செய்யப்பட்டது அதன் மீது மேலும் பாதிப்பின் காரணமாக வாரியத்திற்கு தங்களுடைய விளக்கங்களை தெரிவித்தாலும் அதை மறுபரீசிலனை செய்ய வாரியத்திற்கு அதிகாரம் கிடையாது. வாரியமானது தான் எடுத்த முடிவை தானே மாற்றி வேறு முடிவிற்கு வர முடியாது.

12.04.2018 தேதியிட்ட உத்தரவு:

மனுவை பரிசீலனை செய்து மேலும் ஸ்தல ஆய்வு செய்து அதனுடன் கூட சில சேகரித்த விவரங்கள் அடங்கிய ஆவணங்களையும் பார்த்த நிலையில் ஆலையானது கீழ்கண்ட காரியங்களை செய்ய வழியுறுத்தி வந்த நிலையில் அவற்றை செய்யாமல் இருந்தது தெரிய வந்தது. செய்ய வேண்டிய காரியங்கள் முன்னர் ஆலைக்கு உரிமம் புதுப்பித்து கொடுக்கும் காலத்தில் சில ஒப்புதல் கட்டுப்பாடுகள் கொடுக்கப்பட்டிருந்தன. அந்த கட்டுப்பாடுகள் 12.04.2018 உத்தரவில் உள்ளடங்கும். அந்த கட்டுப்பாடுகள் நீர் சட்டம் பிரிவு 25 **(Prevention and Control of Pollution) Act, 1974 as amended in 1988 and Section 21 of the Air (Prevention and Control of Pollution) Act, 1981 as amended in 1987.**

1) நிலத்தடி நீர் ஆய்வு செய்த அறிக்கையில் ஆழ்துளை கிணறுகள் தொழிற்சாலையின் உள்ளேயும் மற்றும் அதை சுற்றியுள்ள இடங்களையும் உள்ள நீர் ஆய்வு விவரங்கள் சமர்ப்பிக்கவில்லை. அந்த விவரங்களை **TNPCB** யிடம் அளிக்கப்படவில்லை. அதை அளித்திருந்தால் மட்டுமே

நிலத்தடி நீர் ஆய்வு விவரங்கள் மற்றும் தண்ணீரின் தன்மை இவற்றின் மீது ஏற்பட்டுள்ள மாசுதாக்கம் என்னவென்று தெரிந்திருக்கும்.

2) ஆலையானது தாமிர கசடுகளை வெளியேற்றவில்லை அது எந்த இடத்தில் கொட்டப்பட்டிருந்ததோ அல்லது உப்பார் ஆறு கரை சமீபம் இவற்றில் சேமிக்கப்பட்டிருந்ததோ மற்றும் பட்டா நிலங்களில் எந்த வகையில் தண்ணீருடைய போக்கு தடுக்கப்பட்டுள்ளது. ஆகையினால் உப்பார் ஆறுக்கும் மற்றும் கசடுகளை ஆழ் கிடங்குகளில் நிரப்பும் இடத்திற்கும் இடையே தடுப்பு ஏற்படுத்தப்படவில்லை. தாமிர கசடு பட்டா நிலங்களில் கொட்டப்பட்டிருந்தாலும் அவை உப்பார் ஆற்றை அடையாத வண்ணம் தடுப்புகள் ஏற்படுத்தப்படவில்லை.

3) 10.07.2008 தேதியில் கழிவுகள் கையாள்வதற்கான உரிமம் அளிக்கப்பட்டிருந்தது. அந்த உரிமம் 09.07.2011 தேதியில் முடிந்துவிட்டது. ஆனால் ஆலையானது தொடர்ந்து கசடுகளை உற்பத்தி செய்து மற்றும் வெளியேற்றுவதற்கு மற்றும் ஆபத்தை விளைவிக்கும் மற்றும் கழிவு பொருள்கள் **(Management & Transboundary Movement) Rules 2016**ன் படி உரிமம் பெறாமல் தொடர்ந்து செயலாற்றியுள்ளார்கள். மேல்முறையீட்டார் ஆலையிடம் கொடுக்கப்பட்ட கூடுதல் விவரங்கள் கொடுக்கப்படாமல் திரும்ப அனுப்பப்பட்டன. திரும்ப அனுப்பிய காலத்தில் கூடுதல் விவரங்கள் கொடுக்காமல் திரும்ப அளிக்கவில்லை.

4) புதுப்பிக்க கொடுக்கப்பட்ட கட்டுப்பாடுகளை ஆலையானது ஆராய்ந்து ஆர்சனிக் போன்ற கனரக உலோகங்கள் எந்த நிலையில் காற்றில் இருக்க வேண்டுமோ அந்த நிலையை ஆராய்ந்து அதை வாரியத்தின் ஆய்வுகூடத்தில் ஆராய்ந்து மற்ற அங்கரிக்கப்பட்ட **NOx, PM10** மற்றும் **SO2** ஆய்வு செய்வது போல ஆய்வு அறிக்கை சமர்ப்பித்து இருக்க வேண்டும். வாரியத்தில் ஆய்வு கூடத்தில் இந்த வசதி இல்லாத காரணத்தினால் தொழிற்சாலை **MoEF&CC/NABL** அல்லது வேறு எந்த அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக் கூடத்திலோ ஆய்வு செய்யப்பட்டு, அந்த அறிக்கையை வாரியத்திற்கு அனுப்பியிருக்க வேண்டும். தொழிற்சாலையானது இதை செய்யாத காரணத்தினால், தற்பொழுது இது சம்பந்தமாக எந்தவித அதிகாரபூர்வ அறிக்கை இல்லாமல் இருக்கிறது. அப்படி இல்லாத காரணத்தினால் எந்த அளவிற்கு காற்றில் ஆர்சனிக் கலந்து மாசுப்பட்டிருக்கிறது என்பது தெரியாத நிலையில் உள்ளது.

5. 22.02.2018 தேதியில் நடந்த ஆய்வின்பொழுது தொழிற்சாலையை ஒரு ஜிப்சம் குட்டை கட்ட அறிவுறுத்தப்பட்டிருந்தது. அந்த குட்டை **CPCB** வகுத்த கட்டுப்பாட்டுக்கிணங்க கட்டியிருக்க வேண்டும். ஆனால் 31.03.2018 வரை அங்ஙனம் தொழிற்சாலையானது அதை நடைமுறைப்படுத்தவில்லை. வாரியமானது மனு எண்: 11986018 மனுவை நிராகரித்துள்ளது. மேலே நான்காவது சொன்ன காரணத்தினால் புதுப்பிக்க கொடுத்த அனுமதி கொடுக்கப்படவில்லை. மேலே சொன்ன காரணங்களினால் அதிகாரிகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் பிரிவு **33A of Water (Prevention and Control of Pollution) Act, 1974 as amended and under Section 31A of Air (Prevention and Control of Pollution) Act, 1981 as amended, to issue Directions to the unit to stop its production operation. Therefore, in exercise of the powers conferred under 33(A) of Water (Prevention and Control of Pollution) Act and Section 31 (A) of Air (Prevention and Control of Pollution) Act, 1981 as amended in 1987, the Board issues the following direction to the unit of M/s. Vedanta Limited – Copper Smelter, S.F. No.1 to 27, 1220 to 1225, etc, Meelavittan part 1 Village, Thoothukudi Taluk, Thoothukudi District.**

தொழிற்சாலையானது மீண்டும் உற்பத்தியை தொடங்க முடியாது. அங்ஙனம் செய்வதற்கு முன் அனுமதி / மற்றும் புதுப்பித்தல், ஒப்புதல் வாரியத்திடமிருந்து வாங்க வேண்டும்.

உத்தரவு தேதி : 23.05.2018:

வேதாந்தா லிமிடெட், தாமிர உருக்காலை **S.F.No.1 to 7** மற்றும் 1220 முதல் 1225 வரை. மீளவிட்டான் பகுதி 1 கிராமம், சிப்காட் வளாகம், தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். மேலே சொன்ன இரண்டாவது பத்தி விவரங்களை கருதி ஆலையினுடைய உரிமத்தை 2018 முதல் 2023 வரை புதுப்பிக்க கோரி சமர்ப்பிக்கப்பட்ட மனுவை. மேலே கூறிய மூன்றாவது பத்தி காரணத்தினால், எங்ஙனம் செயல்பாடு இருக்கும் நிலையை அங்ஙனம் செய்யாமல் மேலும் முன்னர் கொடுத்த உரிமத்தை அனுசரித்து அதனை செயல்படுத்தாத காரணத்தினால் மூன்றாவது பத்தியில் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. முதல் பத்தியில் முந்தைய காலத்தில் கொடுத்த புதுப்பித்தல் ஒப்புதல் காட்டப்பட்டுள்ளது.

வாரியமானது மேலே சொன்ன நான்காவது காரணத்தினால் தொழிற்சாலையை நீர் சட்டம் **Sec.33A of Water (Prevention and Control**

**of Pollution) Act** மற்றும் காற்று சட்டம் **Sec.31A of Air (Prevention and Control of Pollution).** வாரியத்திடம் ஒப்புதல் பெறாமல் உரிமம் புதுப்பிக்கப்படாமல் தொழிற்சாலை உற்பத்தியை தொடங்க கூடாது. இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் (M)/ திருநெல்வேலி மேலே சொன்ன ஐந்தாவது பத்தியில் அவர் 18.05.2018 மற்றும் 19.05.2018 ஆய்விற்கு பின் சமர்ப்பித்த அறிக்கையின்படி, ஆலையானது தன்னுடைய நடவடிக்கைகளை தொடர்ந்து செய்வதாகவும், மேலும் உற்பத்தியை தொடங்குவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதன் காரணமாக ஆலையை மூடும்படியாகவும் மற்றும் மின்சாரத்தை துண்டிக்கும்படியாகவும் கூறியிருந்தார்.

மேலே சொன்ன விவரங்களை கருத்தில் கொண்டு மற்றும் சட்டரீதியாக கொடுக்கப்பட்ட அதிகாரத்தை கொண்டும், அந்த அதிகாரம் **Sec.33A of Water (Prevention and Control of Pollution) Act 1974 as amended and under Sec.31A of Air (Prevention and Control of Pollution) Act 1981** சட்ட சீர்திருத்தம் கீழ் அதை அனுசரித்து ஆலையை மூடும்படியாகவும், மற்றும் மின்சாரத்தை துண்டிக்கவும் உத்தரவிடப்பட்டது. தற்பொழுது சட்ட ரீதியாக கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி **Sec.33A of Water (Prevention and Control of Pollution) Act 1974 as amended and under Sec.31A of Air (Prevention and Control of Pollution) Act 1981** சட்ட சீர்திருத்தம் கீழ் இவ்வாறு உத்தரவிடப்படுகிறது. வேதாந்தா லிமிடெட், தாமிர உருக்காலை **S.F.No.1 to 7** மற்றும் 1220 முதல் 1225 வரை. மீளவிட்டான் பகுதி 1 கிராமம், சிப்காட் வளாகம், தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். அவர்களுக்கு மின்சாரத்தை துண்டித்து மற்றும் உடனே ஆலையை மூடும்படியாக உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த மூடுதல் உத்தரவு மற்றும் மின்சாரத்தை துண்டிக்கும் உத்தரவு தலைவரால், தலைவருக்கு வாரியத்தினால் கொடுக்கப்பட்ட உத்தரவுகளை அனுசரித்து **BP.Ms.No.9** தேதி: 11.03.1994. அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

28.05.2018 உத்தரவு:

தமிழ்நாடு அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள, கவன ஈர்ப்பு என்னவென்றால் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், வேதாந்தா லிமிடெட், தூத்துக்குடி தாமிர உருக்காலை, சிப்காட் வளாகம், தூத்துக்குடி மாவட்ட ஆலைக்கு புதுப்பித்தல் உத்தரவு கொடுக்கப்படவில்லை. அதை

09.04.2018 உத்தரவு தெளிவுப்படுத்தியுள்ளது. அதற்கு பின் 23.05.2018 தேதியில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆலையை மூடுவதற்கு செயல்பாட்டு உத்தரவுகளும் மற்றும் ஆலைக்கு கொடுக்கப்பட்ட மின்சாரத்தை துண்டிக்க போட்ட உத்தரவும் ஆகும். 24.05.2018 தேதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

2. **Under Article 48-A of the Constitution, "the State shall endeavour to protect and improve the environment and to safeguard the forests and wildlife of the country".**

(அரசியல் சட்டம் பிரிவு 48அ. சுற்றுச்சுழலை பாதுகாத்தலும், மேம்படுத்தலும் மற்றும் வனங்கள் வனவிலங்குகளை பாதுகாத்தலும். நாட்டின் சுற்றுச்சூழலை, அரசு பாதுகாக்கவும், மேம்படுத்தவும் வேண்டும் மற்றும் நாட்டின் வனங்கள், வனவிலங்குகளைப் பாதுகாத்தல் வேண்டும்.

**3. Under sections, 18(1)(b) of the Water Act, 1974 in the larger public interest, the Government endorse the closure direction of the Tamilnadu Pollution Control Board and also direct the Tamilnadu Pollution Control Board to seal the unit and close the plant permanently".**

தமிழ்நாடு மாசுக் கட்டுபாட்டு வாரியம் 28.05.2018ல் பிறப்பித்த உத்தரவு:

வேதாந்தா லிமிடெட், தாமிர உருக்காலை **S.F.No.1 to 7** மற்றும் 1220 முதல் 1225 வரை. மீளவிட்டான் பகுதி 1 கிராமம், சிப்காட் வளாகம், தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு தொழிற்சாலையை மூடும்படியாகவும் மற்றும் மின்சார வாரியத்தின் மின்சார இணைப்பை துண்டிக்கவும், மேலே சொன்ன உத்தரவுகளை கடைப்பிடிக்காமல் நடந்த நிலையிலும், அவைகளை மீறிய நிலையிலும் கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

அரசாங்கம் மேலே பார்வை இரண்டில் சொல்லப்பட்ட காரணங்களை காட்டி அவர்களும் ஆலையை மூடும்படியாக உறுதி செய்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆலையை மூட உத்தரவிட்டுள்ளார்கள். தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் இலச்சினை ஆலையில் பதித்து, ஆலையை நிரந்தரமாக மூடும்படியாக உத்தரவிட்டுள்ளார்கள். மேலே சொன்ன காரணங்களினால் சற்றும் **Sec.33A of Water (Prevention and Control of Pollution) Act 1974 as amended and under Sec.31A of Air (Prevention**

**and Control of Pollution) Act 1981** கொடுக்கப்பட்ட அதிகாரங்களை அனுசரித்து வேதாந்தா லிமிடெட், தாமிர உருக்காலை **S.F.No.1 to 7** மற்றும் 1220 முதல் 1225 வரை. மீளவிட்டான் பகுதி 1 கிராமம், சிப்காட் வளாகம், தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். ஆலையை இலச்சனை பதித்து மூடும்படியாக உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆகையால், நீர்சட்டத்தின் கீழ் ஆலையின் முன்பகுதியில் இலச்சனை பதித்து வேதாந்தா லிமிடெட், தாமிர உருக்காலை **S.F.No.1 to 7** மற்றும் 1220 முதல் 1225 வரை. மீளவிட்டான் பகுதி 1 கிராமம், சிப்காட் வளாகம், தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். மூடும்படியாக உத்தரவிடப்பட்டள்ளது. **Sec.33A of Water (Prevention and Control of Pollution) Act 1974 as amended and under Sec.31A of Air (Prevention and Control of Pollution) Act 1981.**

<u>மேல்முறையீட்டு ஆணையம் உத்தரவு 06.06.2018</u>

தமிழ்நாடு அரசாங்கத்தால் பிறப்பிக்கப்பட்ட அரசாணை **G.O.Ms.No.72, Environment & Forests (EC-3) Department dated: 28/05/2018, directing the Tamilnadu Pollution Control Board to close the plant permanently, we feel it is not appropriate to hear the Appeals and decide the issue at this juncture".**

**43.** காற்று சட்டம் பிரிவு **31B** நீர்ச்சட்டம் பிரிவு **33B,** மற்றும் தேசிய பசுமை தீர்ப்பாணையம் பிரிவு 16(f) கீழ்கண்டவாறு உள்ளது.

**Air Act:** (கீழ்கண்டவற்றின் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் மேல் தேசிய தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.)

**"31B Appeal to National Green Tribunal. – Any person aggrieved by an order or decision of the Appellate Authority under Section 31, made on or after the commencement of the National Green Tribunal Act, 2010, may file an appeal to the National Green Tribunal established under section 3 of the National Green Tribunal Act 2010, in accordance with the provisions of that Act".**

**Water Act:** (கீழ்கண்டவற்றின் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் மேல் தேசிய தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.)

**“33B Appeal to National Green Tribunal. – Any person aggrieved by, -** (தேசிய தீர்ப்பாயத்திற்கு மேல்முறையீடு செய்வதற்கான கீழ்மட்ட உத்தரவுகள்)

**a) an order or decision of the Appellate Authority under Section 28, made on or after the commencement of the National Gren Tribunal Act, 2010; or**

**b) an order passed by the State Gvoernment under section 29, on or after the commencement of the National Green Tribunal Act, 2010; or**

**c) directions issued under Section 33A by a Board, on or after the commencement of the National Green Tribunal Act, 2010, may file an appeal to the National Green Tribunal established under Section 3 of the National Green Tribunal Act, 2010, in accordance with the provisions of that Act.”**

**National Green Tribunal Act:** (தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் அதிகார வரம்பு)

**“16. Tribunal to have appellate jurisdiction. – Any person aggrieved by, -**

**c) directions issued, on or after the commencement of the National Green Tribunal Act, 2010, by a Board, under section 33A of the Water (Prevention and Control of Pollution) Act, 1974 (6 of 1974);**

**f) an order or decision, made, on or after the commencement of the National Green Tribunal Act, 2010, by the Appellate Authority under section 31 of the Air (Prevention and Control of Pollution) Act, 1981 (14 of 1981); may, within a period of thirty days from the date on which the order or decision or direction or determination is communicated to him, prefer an appeal to the Tribunal.”**

**44.** இந்த தீர்ப்பாயம் மேல் முறையீடு வழக்குகளை கேட்டு தீர்ப்பளிப்பதற்கு அதிகாரம் உண்டு என்பது மறுதளிக்க முடியாது. அதுவும் காற்று சட்டத்தின் காரணமாக மற்றும் நீர் சட்டத்தின் காரணமாக ஆலையை மூட சொல்லி உத்தரவு செய்ததின் பேரில், மேல் முறையீட்டு அதிகாரத்தை செலுத்தலாம். இந்த வழக்கில் சர்ச்சைக்கு உட்பட்ட 12.04.2018, 23.05.2018

மற்றும் 28.05.2018 ஆகிய உத்தரவுகள் இதற்கு உட்பட்டவை. ஆலையை இயக்குவதற்கு உரிம உத்தரவு புதுப்பிக்கப்படவில்லை. அது மறுதளிக்கப்பட்டது. அதன்மீது மேல்முறையீட்டிற்கு வழி உண்டு. அந்த மேல்முறையீடு அங்ஙனம் செய்யப்படவில்லை என்ற காரணம் இந்த வழக்கின் தன்மையை மற்றும் சந்தர்ப்பத்தை பொறுத்து மேல் முறையீட்டு அதிகாரம் இந்த ஆணையம் செயல்படுத்த முடியாது என்று கூறுவது சரியல்ல. முன்னமேயே எடுத்துக் கூறியது போல மேல்முறையீட்டு ஆணையம் அந்த அதிகாரத்தை செலுத்த மறுத்துள்ளார்கள் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். 09.04.2018 மற்றும் 12.04.2018 மற்றும் 23.05.2018 மற்றும் 25.05.2018 உத்தரவுகளின்மேல் எடுத்துக்கொள்ளப்பட்ட மேல்முறையீட்டு காரணங்கள் ஒன்றானவை. இந்த நிலையில் மேல்முறையீடு செய்ய முடியாது என்று கூறுவது, மேல்முறையீட்டார் ஆலையை மூடியது சம்பந்தமாக எந்தவித பரிகாரமும் கேட்க முடியாது நிலைக்கு உந்தப்படும். மேல்முறையீட்டு அதிகார நிலை உத்தரவுகளும் இந்த தீர்ப்பாயத்தின் முன் பிரிவு 16(f) **NGT Act, 2010** கீழ் மேல்முறையீடு செய்யலாம். அந்த நிலையில் எதிர்மனுதார்கள் எழுப்பிய ஆட்சேபனைகள் நியாயமற்றவை மற்றும் தகுதியேதும் கிடையாது.

45. தமிழ்நாடு அரசும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் பிறப்பித்த உத்தரவை உறுதி செய்துள்ளது என்ற காரணத்தினால், அரசாங்கத்தின் உத்தரவின் மீது இந்த தீர்ப்பாணையத்தின் முன், மேல்முறையீடு செய்ய முடியாது என்ற காரணம் காட்டி சட்ட நிலையில் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பிறப்பித்த உத்தரவு இந்த தீர்ப்பாணையத்தின் முன் மேல்முறையீடு செய்ய லாயக்குள்ளது என்ற நிலையில் இந்த மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளத்தக்கதுதான். மேலும் தமிழ்நாடு அரசு பிறப்பித்த உத்தரவை ஒரு கொள்கை ரீதியான உத்தரவல்ல. அது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பிறப்பித்த உத்தரவை ஒப்புதல் அளித்துள்ளதே தவிர, அது தனி நிலையில் ஒரு கொள்கை ரீதியான அரசாங்க முடிவு அல்ல.

46. எதிர்மனுதார்களால் சுட்டிக்காட்டப்பட்ட தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு பொருத்தமற்றவை மற்றும் அதை வேறுபடுத்தி காட்டலாம். **Educanti Kistamma Vs. Deokar's Distillery[1] (2003) 5 SCC 669** போல் அல்லாமல் இந்த வழக்கில் அந்த வழக்கை போல் முதலில் கொடுத்த உத்தரவை ரத்து செய்யக் கோரி செய்யப்பட்ட மேல்முறையீட்டு வழக்கல்ல. இந்த தீர்ப்பாணையத்தின் முன் முதலில் பிறந்த உத்தரவுகளும், பின்னர் பிறந்த உத்தரவுகளும் எல்லாவற்றையுமே எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டு உள்ளன. எல்லா உத்தரவுகளின் அடித்தளமும், ஒரு பொதுவானவை.

47. இதற்கு முன் ஏற்பட்ட சட்ட சர்ச்சைகளை கருதி, இந்த தீர்ப்பாணையம் 08.08.2013 தேதியில் பரிசீலனை செய்து ஒரு தீர்ப்பளித்துள்ளது. அந்த வழக்கிலும் இதுபோன்று மேல்முறையீடு ஏற்கத்தக்கது அல்ல என்ற கட்சியின் மீது கீழ்கண்டவாறு இந்த தீர்ப்பாணையம் தம் கருத்துக்களை தெரிவித்துள்ளது.

“62. வேறு வழியின்மையால் இந்த மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளதான் வேண்டும் என்று சொல்வது ஒரு நியாயமான காரணமாகத்தான் கருத வேண்டும். சட்டத்தில் மற்றொரு உரிமை செலுத்தி பரிகாரம் கேட்க முடியும் என்ற நிலையில் அதுவும் அப்படி கேட்காமல் விட்டுவிட்டால், அது அவருக்கு பின் விளைவுகளை ஏற்படுத்துமாயின், அந்த நிலையில் வழக்கினுடைய தன்மைகள் அவருடைய சூழ்நிலைகளை கருதி, மேல்முறையீடு செய்யலாம். மேலும் முதல் நிலையில் மேல்முறையீடு செய்யாத காரணம், மேல்முறையீட்டு ஆணையம் ஏற்படுத்தப்படவில்லை. அது இல்லாமல் இருந்தது என்ற காரணத்தினால் தனக்கு கிடைக்கவேண்டிய தேவையான பரிகாரம் மற்றும் குறுகிய காலத்தில் கிடைக்கக்கூடிய பரிகாரத்தை கேட்கும் நிலையில் நிறுவனமானது வேறொரு அதிகார மையத்தை அணுகி அந்த அதிகார மையம் சட்ட ரீதியாக அந்த அதிகாரத்தை செலுத்த முடியாத காரணம் காட்டாத நிலையில், பாதிக்கப்பட்ட நபர் அந்த அதிகார மையத்திடம் பரிகாரம் கேட்கலாம். மேல்முறையீட்டு நிறுவனம் குறிப்பாக அவசர நிலை ஏற்படுத்தப்பட்ட 29.03.2013 உத்தரவானது மேல்முறையீட்டு நிறுவனத்தை பாதித்துள்ள நிலையில் கருத்தில் கொள்ள வேண்டும். அதைக் கருத்தில் கொண்டால் மேல்முறையீடு செய்ய அதிகாரம் உண்டு. அதுவும் தாமதம் இல்லாமல் செய்யப்பட்டது. அதுவும் உத்தரவு பிறந்து இரண்டு நாட்களுக்குள் செய்யப்பட்டது என்பதை பார்க்க வேண்டும். மேல்முறையீட்டு நிறுவனம் ஆலையை மூடச் சொல்லி உத்தரவு பிறப்பிக்கப்பட்ட காரணத்தினால் அவர்களால் சட்டப்பிரிவு **31** காற்று சட்டத்தின் கீழ் மேல் முறையீட்டு ஆணையம் ஏற்படுத்தாத காரணத்தினால் அதுவும் செயல்படுத்தும் நிலையில் இல்லாத காரணத்தினால், இந்த தீர்ப்பாணையத்தை பரிகாரம் கேட்டு அணுகியுள்ளார்கள். வேறு வழியில்லாத நிலையில் பரிகாரம் கேட்டு தீர வேண்டும் என்ற நிலைப்பாட்டில், மேல்முறையீட்டு நிறுவனமும் காற்று சட்டம் பிரிவு **31B**யை தனக்கு சாதகமாக முன் வைத்துள்ளார்கள். எப்பொழுது மேல்முறையீட்டு அதிகார மையம் தன்னுடைய அதிகாரத்தை பிரிவு **31** காற்று சட்டத்தின் கீழ் தீர்ப்பு பிறப்பிக்கிறதோ அப்பொழுது தேசிய பசுமை தீர்ப்பாணயம் பிரிவு **31B**யின் கீழ் மேல் முறையீட்டை எடுத்துக் கொள்ளலாம். அதை சுருக்கமாக சொல்லும்கால் மேல்முறையீட்டு ஆணையம்தான்,

தகுதியான அதிகாரம் படைத்து பிரிவு **31**ன் காற்று சட்டத்தின் கீழ் உத்தரவு பிறப்பிக்குமாயின், அந்த நிலையில் காற்று சட்டம் **31B**யின் கீழ் இந்த தேசிய பசுமை தீர்ப்பாணையம் மேல் முறையீட்டு அதிகாரத்தை செலுத்தும் அதிகாரம் படைத்தது. இந்த தேசிய பசுமை தீர்ப்பாணையம் தான் மேல்முறையீட்டை எடுத்துக் கொள்வதற்கு பிரிவு **31** காற்று சட்டத்தின்கீழ் மாநில அரசு ஏற்படுத்திய மேல்முறையீட்டு ஆணையம் மேல்முறையீட்டு நிறுவனம் தன்னுடைய முதல் நிலை மேல்முறையீட்டு அதிகாரத்தின் முன், முதல் மேல்முறையீட்டை செய்யாத நிலையில் அதை கைவிட்ட நிலையில் இந்த மேல்முறையீட்டை ஏற்றுக் கொள்ளலாம். அதுவும் இந்த வழக்கினுடைய தனித் தன்மை கருதி மற்றும் சந்தர்ப்பங்கள் கருதி ஏற்றுக் கொள்ளலாம். எதிர் மனுதார்கள் தங்கள் கட்சியை கீழ் வரும் தீர்ப்பை காட்டி தங்களுக்கு சாதகமான நிலை என கட்சி செய்தார்கள். அந்த தீர்ப்பானது உச்ச நீதிமன்றத்தில் 2010 (11) **SCC** 557ல் எடுக்கப்பட்ட சட்ட நிலை, அதாவது எந்த ஒரு மேலதிகார மையமோ, அதனுடைய வரையறுக்கப்பட்ட வகையில்தான் அதிகாரத்தை செலுத்த முடியும். அந்த நிலையில்தான் மேல்முறையீட்டு அதிகாரமோ அல்லது சீராய்வு அதிகாரமோ செலுத்த முடியும். அது சட்ட ரீதியாக அங்ஙனம் தான் செய்ய முடியும். எந்தவொரு மேலதிகார மையமோ தன்னுடைய அறிவை அடமானம் செய்து கீழ்மட்ட அதிகார செலுத்தும் மையத்தை எங்ஙனம் தான் செயல்படுத்த வேண்டும் என்று உத்தரவிட முடியாது. முதல்கண் இந்த வழக்கினுடைய விவரங்கள் மற்றும் சட்ட நிலையில் இந்த வழக்கிற்கு பொருத்தமாகாது. மேலும் இரண்டாவது நிலையில் எப்பொழுது ஒரு பரிகாரம் கேட்க அதிகார மையமோ, ஏற்படுத்தாத நிலையில், அது இந்த வழக்கினுடைய தன்மையை கருதி உச்ச நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்ட மேலே சொன்ன மனோகர்லால் வழக்கின் வெளியே பொருந்தாத தீர்ப்பாக அமைகிறது.”

48. தமிழ்நாடு அரசாங்கம் சட்டப்பிரிவு 18(1)(**b**) நீர் சட்டத்தின் கீழ் பிறப்பித்த உத்தரவு ஒரு தனியான தன் செயல்பாடோடு கூடிய உத்தரவாக கருத முடியாது. அது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பிறப்பித்த உத்தரவின் பின் ஒப்புதல் ஒன்றாகதான் கருத முடியும். தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பிறப்பித்த உத்தரவு இந்த மன்றத்தின் முன் மேல்முறையீடாக காட்சியளிக்கிறது. அது தமிழ்நாடு அரசு தன்னிலையில் ஆலையை மூடுவதற்கோ அல்லது ஆலையை இயக்குவதற்கு அனுமதி மறுப்பதாகவோ கருதலாகாது. தமிழ்நாடு அரசு வேறு எந்த காரணங்களையும் புதியதாக கருதாமல், அதன்மீது ஒரு முடிவுக்கு வராமல், ஆலையை இனி எந்தக் காலத்திலும் மாசை தடுக்க முடியாது அதை மாற்றி அமைக்க

முடியாது, அதனால் ஏற்படும் சுற்றுப்புற சூழலை மாற்ற முடியாது, என்ற முடிவை எட்ட போதுமான காரணம் இல்லாதபோது இவையெல்லாம் ஒரு கொள்கை ரீதியாக தமிழ்நாடு அரசு எடுத்த முடிவாக கருத முடியாது. அதைக் கொண்டு தொழிற்சாலையை நிரந்தரமாக மூடி விடலாம் என்ற முடிவுக்கு வர முடியாது. தமிழ்நாடு அரசாங்கம், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பிறப்பித்த உத்தரவை அனுசரித்து, தான் சுயமாக தீர்மானிக்காத நிலையில், தன்னிச்சையாக முடிவுக்கு வரவில்லை. அந்த அரசாங்க முடிவானது தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் முடிவை ஏதோ ஒரு வகையில் எடுத்த முடிவாகத்தான் கருத முடியும். அந்த நிலையில் இந்த ஆணையம் சட்ட நிலையில் பிறப்பித்த உத்தரவை எதிர்கொள்ள முடியும். ஆக இந்த வழக்கின் தற்பொழுதைய தன்மைகளை கருதி இந்த தீர்ப்பாயம் அடித்தளத்தில் இதுபோன்ற வழக்குகளை மேல் முறையீடாக எடுத்து நடத்த முடியாது. அதற்கு அடித்தளத்தில் அதிகாரம் கிடையாது என்ற வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடிய வாதம் அல்ல.

49. தற்பொழுதுள்ள நடவடிக்கைகளில் முன்னர் கூறியதுபோல மேல்முறையீட்டு ஆணையம் இந்த வழக்கை தீர்மானிக்க இயலாது என்று கூறிய நிலையில், ஆலையை மூட சொல்லி போட்ட உத்தரவு இந்த தீர்ப்பாணையத்தின் முன் விசாரணை செய்ய ஏற்றுக் கொள்ளத்தக்கது. அந்த காரணம் கொண்டு மேல்முறையீடு செல்லத்தக்கது அல்ல என்ற வாதம் ஏற்கத்தக்கது அல்ல. ஏனென்றால் மேல்முறையீட்டாருக்கு எந்தவித சட்ட பரிகாரம் கிடைக்க முடியாத நிலையில் இங்ஙனம் தான் மேல்முறையீடு செய்ய முடியும்.

<u>வழக்கின் தன்மை:</u>

50. மேலே சொன்னவை கருத்தில் கொண்டு ஆலை இயங்குவதற்கு உத்தரவு மறுத்த காரணங்களையும் மற்றும் அதை அனுசரித்து மேல்முறையீட்டார் ஆலையை மூடும்படியாக கூறப்பட்ட காரணங்கள் என்னவென்றால்,

**i)** நிலத்தடி நீரை பகுத்தாய்வு செய்து அதனுடைய அறிக்கையை சமர்ப்பிக்காத காரணம்.

**ii)** உப்பார் ஓடை கரையோரமாக சேமிக்கப்பட்ட தாமிர கசடுகளை எடுக்காத காரணத்தினாலும் மற்றும் உப்பார் ஆறுக்கும் கரையோர தரையில்

சேமிக்க வைக்கப்பட்டிருக்கும் தாமிர கசடுகளுக்கும் உப்பார் ஆற்றுக்கும் இடையே ஒரு தடுப்பு ஏற்படுத்த தவறியது.

**iii)** மேலும் ஆலையானது ஆபத்தை விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்ததற்கும் அவற்றை கையாள்வதற்கும், அதிகார ஒப்புதல் பெறாத நிலை.

**iv)** ஆலையானது காற்றில் கலந்த கன உலோகங்கள் சம்மந்தமாக எந்த அளவிற்கு காற்றில் நிலை கொண்டுள்ளது என்பது சம்மந்தமாக ஆய்வு எதும் நடத்தவில்லை. அந்த ஆய்வானது காற்றினுடைய தன்மை எந்த அளவிற்கு இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு இருக்கிறதா என்று ஆராயக்கூடிய பகுத்தாய்வு.

**v)** மேலும் ஆலையானது **CPCB** கொடுத்துள்ள அறிவுரையின் படி ஜிப்சம் குட்டை கட்டப்படவில்லை.

51) மேலே சொன்ன காரணங்களை காட்டி பிறப்பிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய உத்தரவுகளை நியாயப்படுத்த முடியாது. ஒன்றாவது காரணத்தை பொறுத்து தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்திடமே ஆழ்தள நீர் அறிக்கை அவர்களிடம் உள்ளது. அந்த நிலையில் மேலும் எந்தவித பகுத்தாய்வும் தேவையில்லை. மேலும் அது சம்மந்தமாக மேல்முறையீட்டாரிடம் ஏதேனும் தேவைப்பட்டிருந்தால் அந்த காரணத்தை காட்டி உரிமத்தை புதுப்பிக்காததும் மற்றும் ஆலையை மூடுவதற்கு முன் மேல்முறையீட்டாருடைய நிலையை அவர்களிடம் கேட்டறியாமலும் செய்யப்பட்ட காரியம். மேலும் அப்படி ஏதேனும் தவறுகள் இருப்பினும் அதுவும் எதிர்மனுதாரர்கள் சொல்வது போல தவறுகள் இருப்பினும் அந்த தவறுகள் எள்ளவு தவறுகள் அதன் காரணமாக யாருக்கும் எந்தவித பாதகமும் ஏற்படவில்லை.

52) இரண்டாவது காரணத்தை ஆராய்ந்தால் தாமிர கசடானது எந்த விதத்திலும் ஆபத்தை விளைவிக்கக்கூடியது அல்லது. கமிட்டி நேரடி பார்வை செய்த காலத்தில் அந்த கசடுகள் தண்ணீயினுடைய போக்கை தடுக்கும் அளவிற்கு இருந்ததாக கூறப்படவில்லை. ஒரு தடுப்புசுவர் முழு விஸ்தீரணத்திற்கும் கட்டும்படியாக கூறியிருக்கலாம். இது சம்மந்தமாக மேல்முறையீட்டாளருக்கு எந்தவித முன்அறிவிப்போ அல்லது அவர்களுக்கு இதை திருத்தி அமைப்பதற்கு எந்தவிதமான காலக்கெடுவோ அல்லது செய்யும்படியாக கூறலோ அல்லது அங்ஙனம் செய்யாத பட்சத்தில் பின் விளைவுகளை ஏற்படுத்தும் என்ற எச்சரிக்கை செய்யாமல் நேரடியாகவே

ஏதேச்சதிகாரமாக செயல்பாடு இருந்தது. இந்த காரணத்தை காட்டி ஆலையினுடைய உரிமத்தை புதுப்பிக்காமல் மேலும் அதற்கு உற்பத்தி செய்ய அனுமதியளிக்காமல் நேரடியாக ஆலையை மூடும்படியாக பிறப்பித்த உத்தரவை நியாயப்படுத்த முடியாது.

53) மூன்றாவது காரணத்தை ஆராய்ந்தால் **Hazardous Wastes (Management, Handling and Trans boundary Movement) Rules, 2016** அதன் கீழ் காலக்கெடுவு முடிந்த பின் ஆலை உற்பத்தியை தொடர்ந்து நடத்துகிறது என்று கூறுவது ஏற்கனவே இது சம்மந்தமாக மேல்முறையீட்டார் ஒரு விண்ணப்பம் கொடுத்துள்ளார். அந்த விண்ணப்பத்தை பரிசீலித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்காமல் **TNPCB** மெத்தனமாக இருந்துவிட்டது. மேலும் இந்த காரணத்தினால் எந்தவித ஆபத்தும் விளைவிக்கப்படவில்லை மற்றும் இது போன்ற சிறு தவறினால் ஆபத்துகள் ஏதும் விளைவிக்கக்கூடியதாக இல்லை.

54) நான்காவதாக காட்டப்பட்ட காரணம் வளிமண்டலத்தில் காற்றினுடைய தன்மை ஆராயப்படவில்லை. அதுவும் அங்கீகரிக்கப்பட்ட விதத்தில் ஆராயப்படவில்லை. அதனால் மேல்முறையீட்டார் காற்றினுடைய தர தன்மையை ஆராயாமல் உதாசீனப்படுத்தியுள்ளார் என்பதும் அதன் காரணமாக பின்விளைவுகள் ஏற்பட்ட விவரங்களையும் முன்வைக்கப்படவில்லை. மேல்முறையீட்டார் காற்று சம்மந்தமாக ஆய்வு செய்து, ஆய்வு அறிக்கை சமர்பித்துள்ளனர். ஒரு குறிப்பிட்ட ஆய்வகத்தில்தான் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படவில்லை மற்றும் **TNPCB** ஆய்வுக்கூடத்தில் இது சம்மந்தமாக ஆய்வு நடத்த எந்தவித உபகரணங்களும் வசதிகளும் இல்லாத நிலையில் அதை ஒப்புக்கொண்ட நிலையிலும் இந்த சர்ச்சைக்குரிய உத்தரவு செல்லத்தக்கதல்ல.

55. ஐந்தாவதாக ஜிப்சம் குட்டை **CPCB** வகுத்த வழிமுறையின் கீழ் கட்டப்படவில்லை என்பது ஒரு நியாயமற்ற காரணம் ஏனென்றால் அங்ஙகணம் கட்டுவதற்கு மேல்முறையீட்டாருக்கு இன்னும் காலக்கெடு உள்ளது மற்றும் முன்னர் கட்டிய ஜிப்சம் குட்டையானது அப்பொழுது இருந்த வழிமுறையில் தான் கட்டப்பட்டுள்ளது.

56. இவ்வாறு இருக்கும் காரணத்தில் தான் சர்ச்சைக்குரிய உத்தரவுகள் செல்லத்தக்கதல்ல என்ற காரணத்தினால் அவைகளை நீக்குறவு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

57. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திற்கு நீர் சட்டத்தின் கீழ் மற்றும் காற்று சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட அதிகாரங்கள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள் எந்த காரணத்திற்காக நிறுவப்பட்டதோ அந்த காரணங்களை பூர்த்தி செய்வார்கள் என்ற நம்பிக்கையின் காரணமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. நீர் சட்டம் இயற்றப்பட்ட காரணம் நீர் மாசுபடுவதையும் மற்றும் அங்ஙணம் மாசுபடாமல் தடுப்பதற்காகவும் இயற்றப்பட்டது. அந்த நிலையில் மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள் அதற்காக செயல்பட உருவாக்கப்பட்டன இது போல காற்று சட்டமும் காற்றில் மாசை தவிர்ப்பதற்கும் மற்றும் குறைப்பதற்கும் மேலும் அதை தடுத்து நிறுத்துவதற்கு தகுந்த கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும் நிலையிலும் காற்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இவற்றை நடைமுறை படுத்துவதற்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்கள் துவக்கப்பட்டன. சட்டரீதியாக ஒரு ஆலையை ஸ்தாபிக்க அங்கீகாரம் தேவை மற்றும் அந்த ஆலையை மேல்நடத்துவதற்கு சம்மதம் தேவை அதை நிறைவேற்ற மாசுக்கட்டுப்பாடு வாரியங்கள் துவக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கை பொறுத்தமட்டும் **TNPCB** எடுத்துக்கொண்ட நிலைபாடு மிகவும் ஒரு அதி நூதன சட்ட அணுகுமுறையாகும். எந்த காரணத்திற்காக சட்டம் இயற்றப்பட்டது என்பதை மறந்துவிட்டார்கள். மாசுக்கட்டுப்பாடு விதிகளை ஒரு ஸ்தாபனம் அதற்கு உட்பட தயார் என்று ஒப்புக்கொண்ட நிலையிலும் மேலும் கூடுதலாக ஜாக்கிரதை நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள தயார் என்ற நிலையில் இருந்த பொழுதிலும் மாசுக்கட்டுப்பாடு வாரியங்கள் தன்னிச்சையாக ஒரு தொழிற்சாலையை மூட முடியாது அதுவும் அதிநூதன காரணங்களைக் காட்டி மூட முடியாது. அதுபோல அதிநூதன காரணங்களைக் காட்டித்தான் இந்த வழக்கில் மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் நடந்துகொண்டுள்ளது. நாம் எதிர்பார்ப்பது **TNPCB** ஒரு தொழில் முறையில் தன் நிலைபாடுகளை நிலைப்படுத்தி மற்றும் அதனுடைய செயல்பாடுகளை கட்டுப்பாடு செயலில்தான் நடக்கவேண்டுமே தவிர வேறு வகையில் அல்ல.

58. நாம் முன்னமேயே கூறியவாறு மேல்முறையீட்டார் மீது சொல்லக்கூடிய குற்றங்கள் இதற்கு முன் நடந்த வாரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டது. சென்னை உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாருடைய ஆலைய மூட உத்தரவு இட்ட பொழுதும் அதை உச்ச நீதிமன்றம் 2013 (4) **SCC** 575 தீர்ப்பில் உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை செல்லத்தக்கதல்ல என்று தீர்மானித்துள்ளது. ஒரு ஆலையை மூடக்கோரி உத்தரவிடுவது என்பது சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிலையை கருதித்தான் செய்ய முடியுமே தவிர தொழிற்சாலை மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு அவர்களுக்கு காலக்கெடு

கொடுத்து செயல்படுத்த முடியுமே தவிர நேரடியாக மூட முடியாது. இந்த நிலையில் கீழ்கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு விவரங்களை உற்று நோக்க வேண்டும்.

42) இங்ஙனமாக **NEERI** அறிக்கை 2005 காற்று வெளியேற்றும் மற்றும் மாசு வெளியேற்றும் சுற்றுசூழலை பாதிக்கும் நிலையில் உள்ளது. அதே நேரத்தில் அந்த அறிக்கையை முழுமையாக படிக்கும் காலத்தில் அதில் மேல்முறையீட்டார் இவற்றை தடுப்பதற்கு வாய்ப்பே இல்லை என்ற முடிவுக்கு வர இயலாது. அவர்களால் சுற்றுசூழலை சரி செய்ய முடியாது என்று கூறி அதற்கு ஒரே வழி சுற்றுசூழலை பாதுகாக்க மேல்முறையீடுதார் ஆலையை மூடுதல் உத்தரவு ஒன்றே ஆகும் என்ற முடிவுக்கு வரமுடியாது.

48) மேல்முறையீட்டாரின் **SLP** மனுக்களில் சில விவரங்களை கூறாமல் மறைக்கப்பட்டுள்ளன. உண்மை விவரங்கள் திரிக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த காரணத்தை கொண்டு மேல்முறையீட்டாருக்கு ஆலையை மூடக்கோரி உத்தரவிட முடியாது. மேல்முறையீட்டாரின் ஆலை இந்தியாவிற்கு ஒரு கனிசமான பகுதி தாமிரத்தை உற்பத்தி செய்கிறது. அந்த தாமிரமானது இந்தியாவினுடைய பாதுகாப்பு வகைக்காகவும் மற்றும் மின்சார உற்பத்திக்காகவும் மற்றும் கார் தொழிற்சாலையிலும் மற்றும் தொழில் அடிதளத்தை முன்னேற்றும் வகையிலும் செயல்படுகிறது. இந்த மேல்முறையீட்டாரின் ஆலை சுமார் 1300 பேர் நேரடியாக வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்கள் மற்றும் கூடுதலான நபர்கள் ஒப்பந்தகாரர்கள் மூலமாக வேலையில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும் இந்த தொழிற்சாலையை அனுசரித்து பல சிறுதொழில்கள் இயங்குகின்றன. இந்த தொழிற்சாலையில் பல விதமான நடவடிக்கையின் காரணமாக மத்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கம் மற்றும் சுங்க வரி மற்றும் வருமான வரி மற்றும் **VAT** வரி மூலமாக கனிசமான தொகை கிடைக்கிறது. மேலும் தூத்துக்குடி துறைமுகத்தின் **10%** ஏற்றுமதி இறக்குமதி கையாளுவதில் துறைமுகத்திற்கு உதவியாக இருக்கிறது. அங்ஙனமாக மக்களுடைய கூடுதல் நன்மையை கருதி இந்த வழக்கில் எங்களுடைய அரசியலமைப்பு பிரிவு சட்டம் பிரிவு 136 அனுசரித்து பரிகாரம் கொடுக்கக்கூடாது என்று நாங்கள் நினைக்கவில்லை. அவர்கள் **SLP** மனுவில் தவறான விவரங்கள் மற்றும் அவசியமான விவரங்களை தெரிவிக்காமல் இருத்தல் மற்றும் எதார்த்த நிலையை மறைத்து சிலவற்றை கூறிய காரணத்தினால் அவர்களுக்கு பரிகாரம் அளிக்க முடியாது என்று கூற முடியாது.

50) மேல்முறையீட்டார் இன்றைய நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் 100 கோடி ரூபாய் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரிடம் ஒப்படைப்பு செய்து அந்த தொகையை ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீடாக வைத்து அதுவும் குறைந்த ஆண்டாக ஐந்து ஆண்டுகள் என தீர்மானித்து எந்தெந்த காலத்தில் அந்த ஐந்து ஆண்டுகள் முடிவடைகிறதோ அந்த வைப்பீட்டில் இருந்து கிடைக்கக்கூடிய வட்டியை சுற்றுசூழல் நிலையை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் அந்த சுற்றுசூழல் பாதுகாப்பில் நீர், நிலம் மற்றும் ஆலையை சுற்றியுள்ள இடங்களை சுற்றுசூழல் காரணமாக பாதுகாப்பது அதை **TNPCB** ஒப்புதல் பேரிலும், மற்றும் செயலாளர் சுற்றுசூழல் தமிழ்நாடு அரசு மூலமாகவும் செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சியர் தூத்துக்குடி **TNPCB**-யை கலந்து ஆலோசித்த பின் மேலே சொன்ன அசல் தொகையோ அல்லது ஒரு பகுதியோ செயலாளர் சுற்றுசூழல் தமிழ்நாடு அரசு மூலமாக உபயோகிக்கலாம். எங்கள் தீர்ப்பின் மூலமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பை மட்டுமே மாற்றியமைக்கிறோம். அதே நேரத்தில் இந்த தீர்ப்பினால் **TNPCB** மேல்முறையீட்டாருக்கு அறிவுரைகள் மற்றும் அதுவும் சுற்றுசூழல் பாதுகாப்பிற்காகவும், சட்டத்திற்குட்பட்டும் செய்வதற்கு ஆலையை மூடுவதற்கு எந்த தடங்களும் இல்லை.

59) மேலும் இந்த தீர்ப்பாயம் 08.08.2013ல் மேலே சொன்ன தீர்ப்பை மனதில் கொண்டு அதை நிரூபிக்கும் வகையில் தகுந்த காரணங்கள் காட்டப்பட்டு செயல்பட வேண்டும். ஒரு சந்தேகத்தின் காரணமாக மட்டும் ஆலையை மூடமுடியாது. அதுவும் காற்று மாசுபட்டுள்ளது என்ற காரணம் காட்டி ஆலையை மூட முடியாது. இந்த தீர்ப்பில் தீர்ப்பாயம் கீழ்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளது.

47) ‘‘எந்தவித மருத்துவ ஆவணங்களோ ஜனங்கள் கண் அரிப்பு ஏற்பட்டு மற்றும் தொண்டையிலே அரிப்பு ஏற்பட்டு மற்றும் மூச்சு திணறல் 23.03.2013ல் காலை நேரத்தில் **SO2** வெளியேற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ளது என்பதற்கு தகுந்த காரண விவரங்கள் இல்லாததாக இருக்கிறது. 23.03.2013 தேதியில் காலை நேரத்தில் **SO2** வெளியேற்றப்பட்டதாக கூறப்படுகிறது. இது மருத்துவர்கள் அனுமானமே தவிர எதார்த்த நிலை இல்லை. ஒரு வாதத்திற்காக அதை எடுத்துக் கொண்டாலும் இந்த ஆலையினுடைய செயல்பாடுகளும் மற்றும் இந்த ஆலையினால் கூடுதலான காற்று அந்த காலக்கட்டத்தில் வெளியேற்றப்படுகிறது என்பதற்கு ஒரு சங்கிலி தொடர் விவரங்கள் தேவை இதை நேரடி பார்வை மூலமாகவும் அல்லது ஆவணங்கள் மூலமாகவோ அல்லது வேறு எந்த வகையிலும் காற்று

மாதிரியை எடுத்து அதை புகைபோக்கியிலிருந்து எடுத்து அதன்மூலம் அந்த காலக்கட்டத்தில் எந்த அளவிற்கு காற்றினுடைய தன்மை இருந்து வந்தது என்று சொல்வதற்கும் தீர்க்கமான தொடர்பு வேண்டும். அதை இன்றுவரை செய்யாத காரணத்தினாலும் இதற்காக ஏற்படுத்தப்பட்ட **Special Expert Committee** பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்ட தகுதி படைத்த குழுவானது தங்களுடைய அறிக்கையில் தெளிவாக சொல்லியுள்ளது. காற்றினுடைய தரம் பலவேளைகளில் ஆராய்ந்ததில் அருகில் உள்ள தொழிற்சாலைகளும் காற்றினுடைய தன்மையை பாதித்துள்ளது தெரிகிறது. அதனால் $SO_2$-னுடைய நிலையும் சுற்றியுள்ள தொழிற்சாலைகளின் காரணமாக அவர்கள் பங்கிற்கு மாற்றங்களை விளைவிக்கிறது.

49) ஒட்டுமொத்த விவரங்களை கூட்டாக ஆராயும்கால் மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியம் இவற்றை கருத்தில்கொண்டு, நாங்கள் வந்த முடிவு யாதெனில், கூடுதல் $SO_2$ வெளியேற்றத்தின் காரணமாக அல்லது கசிவினால் ஏற்பட்டதாக கூறும் சம்பவம் காரணமாக மேல்முறையீடுதார் ஆலையிலிருந்து வெளிவந்ததாக சொல்லப்படும் $SO_2$ ஒரு சந்தேகத்தின் ஆஸ்பதமாக கருதலாமே அன்றி அந்த நடந்ததாக சொல்லக்கூடிய சம்பவம், சுகாதாரத்திற்கு ஆபத்தான நிலையை உண்டு பண்ணக்கூடியது என்பது ஒரு மன பிராந்தி மற்றும் காரணமில்லாமல் ஏற்படுத்திய சந்தேகம் மேலும் அங்ஙனம் ஏற்படுத்தியமைக்கு எந்தவித வரிசைப்படுத்தக்கூடிய சாட்சியம் முன் வைக்கப்படவில்லை. பிரதிவாதி வாரியம் இந்த தீர்ப்பாயத்தின் முன் எந்தவித விஞ்ஞான பூர்வமான முடிவின்படி 23.03.2013 முதல் 29.03.2013 வரை கூடுதலாக காற்றில் வெளியிடப்பட்டதின் காரணமாக, ஆபத்தை விளைவிக்கும் சுகாதாரகேடை விளைவிக்கும் வகையில் அங்கு வசித்திருப்பவர்களுக்கு ஏற்பட்டது என்று கூறுவதற்கு விஞ்ஞான பூர்வமான அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை.

140. ஒரு தொழிற்சாலையை மூடுவது என்பது அது உரிமையியல் சாவு. அந்த நிறுவனத்திற்கு ஏற்படுத்துவதாகும். ஆலையை மூடு என்று போடும் உத்தரவினால் அந்த இயங்கி வரும் ஆலைக்கு மட்டுமல்லாமல், அது உற்பத்தியை முழுமையாக நிறுத்துவது அல்லாமல், அதனால் பொருளாதார ரீதியாக மற்றும் சமுதாய ரீதியாக மற்றும் தொழிலாளர் பாதிப்பு ரீதியாக பின் விளைவுகள் ஏற்படும். ஒரு ஸ்தாபனத்திற்கு உரிமையியல் மரணம் அந்த நிறுவனத்திற்கு ஏற்படுத்துவதற்கு முன், அங்ஙனம் முடிவுக்கு வரக்கூடிய அதிகார மையம் தங்களால் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சி அல்லது விபத்து இவற்றை அதுவும் விபத்து தொழிற்சாலையால் சட்ட மீறல்கள் காரணமாக

ஏற்பட்டவை என்பதற்கு விஞ்ஞான பூர்வமான விவர சேகரிப்பு செய்யப்பட வேண்டும். நேரடியாக தொழிற்சாலையால் ஏற்பட்ட கசிவு மற்றும் எந்த இடத்திலிருந்து அது ஏற்பட்டது. அதனுடைய விளைவால் பின் தாக்கத்தால் காற்றினுடைய தன்மை மாசுப்படுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக பொது மக்களின் சுகாதாரக் கேடும் ஏற்பட்டுள்ளது என்பதற்கு நேரடி தொடர்பு இருக்க வேண்டும். இவை அடிப்படையாகவே நேரடி தொடர்பு இருக்க வேண்டும். உத்தரவிற்கு பின் அதை கடைப்பிடிக்காத காரணத்தினால் ஏற்பட்டதாக கருதலாகாது.

141) தாங்கள் நேரடி சாட்சியம் மூலமாகவோ, அல்லது மறைமுக சாட்சியம் மூலமாகவோ, வாயுக் கசிவு ஏற்பட்டுள்ளது அல்லது கூடுதலாக அந்த தொழிற்சாலையிலிருந்து காற்று வெளியேற்றப்பட்டுள்ளது, அதுவும் மேல்முறையீட்டார் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாக எதிர்மனுதார் வாரியம் இந்த வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்ட நிலையில் நிரூபிக்கவில்லை. மேலும் இந்த வழக்கை இந்த வகையில் ஏற்பட்டக் கூடியதாக கருதலாம் என்ற நிலைப்பாடையும் முன் வைக்கவில்லை.

142) 29.03.2013 தேதியில் வாரியத்தினால் மேல்முறையீட்டார் தொழிற்சாலை ஒரு தடுப்பு நடவடிக்கையாகவோ அல்லது பாதுகாப்பை கருதி ஏற்படுத்திய நடவடிக்கையாகவோ கருத முடியாது. அது தண்டிக்கும் விதமாக எடுக்கப்பட்ட முடிவு. அந்த முடிவானது மேல்முறையீட்டார் தொழிற்சாலையில் 23.03.2013 தேதியில் கூடுதலாக வாயு வெளியேற்றம் இருந்ததாகவும், அதனால் அதை சுற்றி 6 முதல் 8 கி.மீ வரை உள்ள மக்களுக்கு கேடு விளைவித்ததாகவும் சொல்லப்படுகிறது. இதை தடுத்து நிறுத்தியிருக்க முடியாது என்பது பிரதிவாதி வாரியத்தினாலே ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த சம்பவம் முன்னரே ஏற்பட்டது என்றால் அந்த நிலையில் செய்த காரியம் வரக்கூடிய விபத்தை தடுக்கும் காரியமாக கருத முடியாது. கூடுதல்பட்சமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை பகுதியாக தடுப்பு நடவடிக்கையாகும் மற்றும் பகுதியாக தண்டிக்கும் வகையிலும் ஏற்பட்டுள்ளது. முதலில் சுற்றி இருக்க கூடிய மக்கள் கண் எரிச்சலோ, தொண்டை கமறலோ, மூச்சு முட்டுதலோ, பின் விளைவாக ஏற்படவில்லை. இரண்டாவதாக, புகார்கள் இது சம்பந்தமாக முன்னமேயே பெறப்பட்டவை. ஒரு தண்டிக்கும் நிலையில் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கும் மற்றும் இனி வருங்காலத்தின் செயல்பாட்டிற்காக பிறப்பிக்கக்கூடிய உத்தரவுகள், கடைபிடித்தல் உத்தரவுகள், அவைகள் தடுப்பு நடவடிக்கையாக, முன் பாதுகாப்பு நடவடிக்கைகாக கருத முடியும். இந்த வழக்கில் தகுதியான விஞ்ஞான பூர்வமான விவரங்கள் இல்லாத காரணத்தினால், மேலும் வாரியமே தன்னிலையில் புகைப்போக்கியோ, விவர

சேகரிப்போ, காற்றினுடைய ஆகாய தன்மையிலிருந்து 23.03.2013 தேதியில் விவரங்கள் ஏதும் சேகரிக்கப்படவில்லை. இந்த நிலையில் எப்படி ஆலையை மூடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்பது தெரியாத புதிராக உள்ளது. குறிப்பாக சிப்காட் வளாகத்தில் கூடுதலான தொழிற்சாலைகள் உள்ளன என்று ஒப்புக்கொண்ட நிலையிலும், அந்த சில தொழிற்சாலைகள் கனரக மற்றும் சிவப்பு வகையாக கருதக்கூடிய தொழிற்சாலைகள். அதனால் அவை மாசுப்படுத்தும் தன்மையுடையவை. மேலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விவரம் யாதெனில் வெளியேறும் வாயுக்களை அந்த தொழிற்சாலைகளும், வெளியேற்றுகின்றனர். அதன் காரணமாகவும் சுகாதார நிலை கேடுகளும், அந்த ஆலைகள் **$SO_2$** அன்றி இதர வாயுக்களையும் வெளியேற்ற செய்கின்றன. எதிர்மனுதார் வாரியம் இந்த நடவடிக்கையை ஒரு தடுப்பு நடவடிக்கையாகவும், மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையாகவும் கருத முடியாது. அது ஒரு தண்டிக்கும் உத்தரவாக பிரிவு 5ன் கீழ் கருத முடியும். பிரிவு 5 என்பது **Environment (Protection) Act, 1986.** இதற்கு முன்னோடியாக ஒரு தண்டிக்கும் உத்தரவாக ஒரு நிலைப்பாடு எடுக்கும் முன், அதிகாரிகள் இங்ஙனம் ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அன்றைய தினம் கூடுதலாக வாயு வெளியேற்றம் இருந்ததாகவும், அதுவும் மேல்முறையீட்டாரின் புகைப்போக்கியிலிருந்து ஏற்பட்டதாகவும், அதன் காரணமாக வாயுவின் தன்மையை பரிசீலிக்கும்பொழுது, அதில் **$SO^2$** வாயு இருந்ததாகவும், அது அடிப்படையாக மேல்முறையீட்டாருடைய ஆலையிலிருந்து வாயு வெளியேற்றப்பட்டத்தின் காரணமாக ஏற்பட்ட நிலையிலும், அது 6 முதல் 8 கி.மீட்டர் வரை உள்ள கிராமங்களுக்கு அந்த வாயு பரவியதாகவும், அதனால் அங்குள்ள மக்களுக்கு சுகாதார கேடு ஏற்பட்டதாகவும், நிரூபிக்க வேண்டும். இங்ஙனம் நிரூபித்து இருந்தால், எடுத்திருக்கும் முடிவு தண்டிக்க கூடிய முடிவாக இருந்தாலும் அதுவே ஒரு நல்ல காரணமாக கருதி, அதனால் அதை ஒரு தடுப்பு உத்தரவாக கருதி, அதை பின் காலங்களை கருதி செய்யப்பட்டதாக கருதலாம். இந்த வழக்கில் தண்டிக்க தகுந்த ஒரு நடவடிக்கை ஒரு நிரூபிக்கப்பட்ட உரைகல்லில் சோதித்த நிலையில் கருதி, அதை ஒரு தடுப்பு நடவடிக்கை உத்தரவாக எடுக்கலாம். இதனால் வரக்கூடிய ஆபத்தை கருதி எந்தவொரு அறிவான மனிதனும் செய்திருக்கலாம். உறுதியான ஆதாரம் மற்றும் விஞ்ஞான ரீதியான விவரங்களை சேகரித்தல். இதுபோன்ற உத்தரவுகளுக்கு அதுவே அடித்தளமாக அமையும். அங்ஙனம் இல்லாத நிலையில் எடுத்த நடவடிக்கைகள் சட்டத்தின் கண்ணோட்டத்தில் சொல்லத்தக்கவையாக கருத முடியாது.”

60) தமிழ்நாடு அரசு மற்றும் **TNPCB-**யின் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் சில நிபுணர்களுடைய கருத்துக்களையும் மற்றும் அவர்களுடைய கட்டுரைகளையும், இனி வரக்கூடிய மாசை கருதி அது ஜிப்சம் கழிவினால் மற்றும் தாமிரக் கழிவினால் ஏற்படக்கூடியது என்று சொல்வதற்கு எந்தவித விஞ்ஞான ரீதியான சாட்சியமும், அதற்கு முன்வைக்கப்படவில்லை. மேலும் இந்த கருத்துக்கள் முன் வைத்த எழுத்தாளர்கள் அந்த கட்டுரைகளை எந்த தொழில்நுட்பத்தின் அடிப்படையில் அதுவும் 1950 முதல் அதற்கு முந்தைய காலத்தில் உள்ள தொழில்நுட்பத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது. தொழில் நுட்பம் மாறுபாடு அடைந்துள்ளது. அதன் காரணமாக எந்த ஒரு பொருளும் சுற்றுச்சூழல் விளைவுகளை குறைப்பதும் மற்றும் அதன் பின் விளைவுகளை தவிர்க்கும் நிலையிலும் அது குறைக்கவும், ஒரு பெரிய அளவில் விஞ்ஞான பூர்வமான விதத்தில், புதிய தொழில்நுட்பம் தற்பொழுது உள்ளன. குறிப்பாக உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை பொறுத்து இருசாராரும் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை கருத்தில்கொண்டு, பார்த்தால் தூத்துக்குடி மாநகரின் **TDS** அளவு 4000 மேலாக உள்ளது என்பது அதிகாரிகளால் வரையறுக்கப்பட்டத்தை விட கூடுதலானது. மேலும் **CPCB** மற்றும் **TNPCB** தெளிவாக சொன்ன கருத்து என்னவென்றால் ஜிப்சம் கழிவும், தாமிரக் கழிவும் பூமியின் உட்பகுதியில் புகுந்தால் கூட ஆபத்தைக் விளைவிக்கக்கூடிய தன்மையற்றது. அவற்றை பள்ளமான நிலங்களை, நிரப்பவும் மற்றும் சாலைகள் அமைக்கவும் மற்றும் சிமெண்ட் தயாரிப்பிலும் ஈடுபடுத்தப்படுகின்றன. எந்த ஒரு பொருளானது மாசு ஏற்படுத்துமோ, அதை இந்த வகை உபயோகத்திற்கு அதிகாரிகள் உபயோகிக்க பரிந்துரைக்கமாட்டார்கள். அது வேறு வகையில் உபயோகத்திற்கும் பரிந்துரைக்க மாட்டார்கள். இது சம்பந்தமாக எந்தவிதமான சாட்சியமும் முன் வைக்கப்படவில்லை. தண்ணீரின் தன்மை அங்கீகரிக்கப்பட்ட நிலையை காட்டிலும், மேலான நிலையில் இருந்தாலும் அது அந்த இடங்களில் சுகாதார கேடும் மற்றும் மாசு நிலையும் ஏற்படுத்தியதாக எந்த ஆதாரமும் இல்லை. இவற்றிற்கெல்லாம் அதிகாரிகள் விஞ்ஞான பூர்வமான விவரங்களை சேகரிக்காத பட்சத்தில் அதன் காரணமாக ஒப்புதல் கொடுக்க மறுத்த நிலையிலும், நிரந்தரமாக ஒரு தொழிற்சாலையை மூடக் கொடுத்த உத்தரவும் ஏற்கத்தக்கதல்ல. ஆக **SPCB** மற்றும் **CPCB** அவர்களுக்கு ஒரு பொறுப்பு உள்ளது. உடனே தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அதன் காரணமாக சுற்றுச்சூழல் மாசு விளைவுகள் தொழிற்சாலைகளால் ஏற்படுத்தக்கூடியவை தடுக்கப்பட வேண்டும் இந்த சந்தர்ப்பத்தில் அதுபோன்ற

தடுப்பு நடவடிக்கைகள் எடுக்காமல் ஒப்புதலை மறுப்பதும், மற்றும் ஆலையை மூடச் சொல்லி உத்தரவிடுவதும் சட்ட ரீதியாக செல்லத்தக்கது அல்ல.

61) மேல்முறையீட்டார் தாக்கல் செய்து உள்ள ஆவணங்களை பரிசீலித்ததில், 18.05.2018 மற்றும் 19.05.2018 ஆகிய தேதிகளில் வாரிய அதிகாரிகள் கூட்டு ஆய்வு நடத்தியதற்கான வாய்ப்பு இல்லை. வாரியம் இந்த ஆலையை மூடுவதற்கு காரணமாக சொல்லப்படும் அந்த ஆய்வு நடைபெற்றதாக ஆதாரமில்லை. ஆய்வு சம்பந்தமாக முன்பு அறிவிப்பு கொடுக்கப்படவில்லை மற்றும் ஆய்வின் அறிக்கை பிரதிகளை மேல்முறையீட்டார்களுக்கு அளிக்கவில்லை. அந்த நிலையில் எந்தவித குற்றம் குறைகள் அவர்கள் பார்வையிட்ட காலத்தில் இருந்தாலும், அவை பிரிவு 26 காற்று சட்டம் மற்றும் பிரிவு 27 நீர் சட்டம். அவைகள் பிரிவு 26(2) காற்று சட்டம். அந்த அறிக்கை பிரிவு 26(3) மற்றும் பிரிவு 26(4) கீழ் சாட்சியத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. இந்த ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க ஆவணங்களாக இல்லாத காரணத்தினால், அதிகாரிகள் எந்தவித முன்னறிவிப்பும் மற்றும் மேல்முறையீட்டாருக்கு தகுந்த வாய்ப்பும் கொடுக்காத காரணத்தினால், அவர்கள் பிறப்பித்த உத்தரவானது தன்னிச்சையாக பிறப்பிக்கப்பட்ட அதிகாரமாக கருதி அதன் காரணமாக அவை சட்டப் பூர்வமாக செல்லத்தக்கது இல்லை. அதன் காரணமாக அந்த உத்தரவு தள்ளத்தகுந்தது.

<u>குழுவினால் கொடுக்கப்பட்ட அறிக்கையின் விளைவாக எழக்கூடிய கூடுதல் எழுவினாக்கள்:</u>

62) முன்னமையே எடுத்துக்கூறியபடி ஒரு கமிட்டி தீர்ப்பாயத்தினால் நியமிக்கப்பட்டது. அதன் காரணம் யாதெனில் சர்ச்சைக்குரிய அந்த உத்தரவுகள் இந்த தீர்ப்பாயத்தின் முன் செல்லத்தக்கதல்ல என்ற போதிலும் **TNPCB**-க்கு மற்றும் இந்த வழக்கில் தலையிட்ட மூன்றாவது நபர்களுக்கும் மேலும் ஒரு சந்தர்ப்பம் ஒரு நடுநிலை மன்றத்தின் மூலம் தங்கள் கட்சி கூறும் வகையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. அந்த குழுவினால் மேல்முறையீட்டார் தங்கள் ஆலையை தொடர்ந்து நடத்தும் பட்சத்தில் அதனால் சுற்றுசூழலுக்கு ஏற்படும் பின்விளைவுகளை என்ன என்று கண்டறியுவதற்கு.

63) இந்த தீர்ப்பாயம் தான் செயல்படும் நிலையில் அதற்கு சட்டரீதியாக சட்டப்பிரிவு **NGT Act** பிரிவு 20ன் கீழ் பாதுகாப்பு நலனை கருதி அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு

அரசாங்கத்தின் சார்பாகவோ அல்லது **TNPCB**-யின் சார்பாகவோ கூறக்கூடிய எதிர்ப்பு காரணங்களில் எந்தவித நியாத்தன்மையும் இல்லாத காரணமாக பின்வரும் காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன. சட்டநிலைப்பாடான அதிகாரங்களை அங்ஙனம் செய்தால் அந்த அதிகாரத்தை குழுவிடம் தீர்ப்பாயம் ஒப்படைத்ததாக கருதலாகும் என்ற வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதம் அல்ல. இந்த தீர்ப்பாயம் வழக்கின் விவரங்களை கண்டறிய ஒரு நியாயமான நம்பிக்கைக்கு தகுந்தமான ஒரு நிபுணர் குழு வழிவகை மூலம் விவரத்தை அறிந்து கொள்ள முழு உரிமையுண்டு. பிரிவு **19 NGT ACT** கீழ் இந்த தீர்ப்பாயம் சிவில் செயல்முறை குறியீடு **(CPC)**யின் கீழ் தன்னிலை செயல்பாட்டை செயல்படுத்திக்கொள்ள முடியாது. அதே நேரத்தில் இயற்கை நீதியின் கொள்கை ஆற்றலை கொண்டு தீர்மானித்துக் கொள்ள இயலும். இந்த தீர்ப்பாயம் தன்னுடைய செயல்முறைகளை தானே வகுத்துக் கொள்ள முடியும். இந்த தீர்ப்பாயம் சாட்சிய சட்டத்தின் **(Evidence Act)** கீழ் உள்ள விதிகளுக்கு கட்டுப்பட்டதல்ல. சில விசயங்களில் குறிப்பாக சட்டப்பிரிவு **19(4)**ன் கீழ் இந்த தீர்ப்பாயம் ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகார நிலையை செலுத்த முடியும். இந்த தீர்ப்பாயம் எந்தவித தடங்கலாகவும் தான் வகுத்துக் கொண்ட வழிமுறைகளை கருத்தில் கொண்டு ஒரு குழு அமைத்து அதன்மூலம் எதார்த்த நிலையை கண்டறிய தாவா இடத்திற்கே சென்று அங்கு சம்மந்தப்பட்ட எல்லோரையும் கேட்டு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கலாம். இதன்மூலம் இந்த தீர்ப்பாயம் தன்னுடைய நீதிநிலை அதிகாரங்களை எந்த வகையிலும் வேறு ஒரு குழுவிடமும் ஒப்படைக்கவில்லை. தன் அதிகாரத்திற்குட்பட்ட நிலையிலேயே அந்த குழுவிடம் சில விவரங்களை கேட்டு கண்டறியுவதற்கு அந்த நிலையில் அந்த அறிக்கைகளை பார்வையிட இந்த தீர்ப்பாயத்திற்கு உரிமையுண்டு. இந்த தீர்ப்பாயம் மேல்முறையீட்டில் தீர்மானிக்க வேண்டிய விவரங்கள் உள்ளன. அது எந்த நிலையிலும் எந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்க முடியும் மற்றும் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்கள் மற்றும் நிபுணர்கள் அறிக்கையை கண்டறிவதற்கு மேல்முறையீடை அந்த நிலையிலும் கருத்தில் கொண்டு தீர்மானிப்பதற்கு உரிமையுண்டு. ஒரு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் அதற்கு உதவியாக **CPCB** மற்றும் **MoEF** அவர்களுடைய நுண்ணிய விஞ்ஞான ரீதியான செயல்திறன் கொண்ட அதிகாரிகளை உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதிக்கு உதவுமாறு நியமிக்கலாம். அந்த நிலையில் அந்த குழு அறிக்கையை இந்த தீர்ப்பாயம் கருத்தில் கொள்ளக்கூடாது என்று யாரும் காரணம் காட்ட முடியாது.

64) மேலும் இந்த தீர்ப்பாயத்தின் உத்தரவுகளை உச்ச நீதிமன்றத்தில் தாக்கிய காலத்தில் உச்ச நீதிமன்றம் இந்த தீர்ப்பாயம் மேல்முறையீடு ஏற்றுக்கொள்ள லாயக்கானதா மற்றும் அதனுடைய தன்மையை கருத்தில் கொள்ள ஒரு குழு சமர்ப்பித்த அறிக்கைக்கு பின் **NGT**-யே தீர்மானிக்கலாம் என்பது உச்சநீதிமன்றத்தின் கருத்து.

65) மேல்முறையீட்டார் ஒரு குழுவினுடைய அறிக்கை இல்லாமலேயே இந்த தீர்ப்பாயம் தன்னிலையிலேயே தாக்கல் செய்துள்ள தகவலின் மீது ஒரு முடிவுக்கு வரலாம் என்பதை ஒப்புக்கொண்டு தெளிவுபட நாம் எடுத்துக்கூறும் நிலையில் உள்ளோம் என்பதை உறுதி செய்கிறோம்.

66) ஆக கீழ்கண்ட தீர்ப்புகள் **Jamal Uddin Ahmad Vs Abu Saleh Najmuddin and Ors 2003 (4) SCC 257 Para 14** மற்றும் **Subhas Kumar Chatterjee and Ors 2010 (11) SCC 694, Para 9, 20, 21, 25 and 27** மற்றும் **Amiya Bala Paul Vs Commissioner of Income Tax 1961 (1) SCR 884, Shillong 2003 (6) SCC 342, Para 15** இவைகளை எதிர்மனுதாரர்கள் தங்கள் சார்பாக முன்வைத்தார்கள். அந்த தீர்ப்புகளில் சட்டரீதியாக தீர்மானிக்க வேண்டிய விவரங்களை எந்தஒரு மன்றம் தானே நேரடியாக தீர்க்க வேண்டுமோ அதை சட்டரீதியான நிலையில் வேறு ஒருவரிடம் அந்த வேலையை மாற்றிக்கொடுக்க முடியாது என்பதாகும். அந்த தீர்ப்புகள் இந்த வழக்கிற்கு பொருத்தமற்றவை மேலும் வழக்கினுடைய நிலையை கருதி அவை பொருத்தமற்றவை என்ற முடிவுக்கு வருகிறோம். அது போன்று இந்த தீர்ப்பாயம் வேறொரு நபரிடம் தான் சட்ட ரீதியாக செய்ய வேண்டிய செயல்பாடுகளை மற்றொரு நபரிடம் ஒப்படைக்கவில்லை.

67) அப்படி இந்த தீர்ப்பாயம் ஒரு நியமித்த குழு தன்னுடைய அதிகார நிலையை தாண்டி இந்த தீர்ப்பாயம் சட்டநிலையில் செய்ய வேண்டியவற்றை பற்றி சில முடிவுகளை தீர்மானித்திருந்தாலும் அதனால் இந்த தீர்ப்பாயம் அந்த குழுவினால் சேகரிக்கப்பட்ட விவரங்களை இது போன்ற முடிவுக்கு வந்ததற்கு அதன் காரணமாக இந்த தீர்ப்பாயமும் சுயமாகவே தன்னிலையில் மேற்படி குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட முடிவுகளை கீழ்மட்ட அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவுகள் சரியா அல்லது தவறா என்பதை பற்றி குழு கொடுத்த முடிவுகள் இந்த தீர்ப்பாயத்தை கட்டுப்படுத்தாது. குழுவினுடைய சில குறிப்பிட்டுள்ள விவரங்களை மற்றும் முடிவுகளை இருசாராரும் அதை தங்களுக்கு சாதகமாக முன்வைத்தாலும் அதன்மூலம் தங்களுடைய நிலைபாடு மற்றும் கட்சியை உறுதி செய்ய முன் வைத்தாலும் அதுவும் இந்த வழக்கினுடைய தன்மையை கருதி எதிர்மனுதாரர் வழக்கறிஞர்கள்

மற்றும் வழக்கில் மூன்றாவது நபர் தலையீட்டார் ஆகியோர் குழுவினுடைய அறிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்ளத்தக்கதாக கருதலாகாது என்ற வாதத்திற்கு தாக்கம் ஏதும் கிடையாது.

68) குழுவினுடைய அறிக்கை குழுவினால் ஸ்தல இடத்திற்கு பார்வைகள் செய்யப்பட்டு மற்றும் தாமிர கசடுகளை பார்வையிட்டு மற்றும் தாமிர உருக்கு ஆலையை பார்வையிட்டு மேலும் 3வது நபர் தலையீட்டாரிடமும் பொது விசாரணை செய்து மற்றும் இது சம்மந்தப்பட்ட இதர நபர்களை 7 நாட்கள் செலவு செய்து விவரங்கள் சேகரித்துள்ளார்கள். அவர்கள் பார்க்கும் காலத்தில் தாமிரம் கழிவு எந்த இடத்தில் ஓடையின் பக்கம் இருக்கிறதோ அந்த தாமிரம் கசடு சுக்காக காய்ந்திருந்தது. மேலும் 3ல் ஒரு பாகம் தடுப்புச் சுவர் தாமிரக் கழிவு கொட்டும் இடத்தில் கட்டப்பட்டிருந்தது. தாமிர கசடு ஆபத்தை விளைவிக்கும் பொருளாக இல்லாத நிலையிலும் அது காற்றிலே காற்றடி காலத்தில் கலந்தோ அல்லது தண்ணீரை மாசுப்படுத்தவோ வாய்ப்பு உண்டு. குழுவானது கந்த அமிலம் சேமிப்பு இடத்தில் ஒழுக்கு இருந்ததாகவும், ஆனால் அதை திடீரென்று ஆலையை மூடிய காரணத்தினால் கையாளும் நிலையில் இல்லையென்ற விவரம் கண்டறிந்தார்கள். தாமிர தாது தீப்பற்றக் கூடியது. தாமிர கழிவு கடினமான பாறைபோல் இறுக்கமாக காணப்பட்டது. நாம் குழுவினுடைய முயற்சிகளை நன் முயற்சியாக கருதுகிறோம்.

69) நாம் சுதந்திரமான முடிவுக்கு வந்தநிலையில் சர்ச்சைக்குரிய உத்தரவுகள் நிலைக்கத்தக்கவை அல்ல மற்றும் ஆலையை மூடுதல் ஒரு நியாயமற்ற செயல் என்ற முடிவுக்கு வருகிறோம். இனி பார்க்க வேண்டிய விசயம் என்னவென்றால் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பத்தி 4ல் சில பரிந்துரைகளை முன்வைத்ததை அவற்றை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமா? அல்லது எந்த நிலைக்கு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

70) மேல்முறையீட்டார் சார்பாக வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளில் **(a) to (j)** மற்றும் **(l), (q), (v), (w), (x) and (y)** பரிந்துரைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அந்த பரிந்துரைகளை மேல்முறையீட்டார் நடைமுறைப்படுத்த வேண்டும்.

71) அந்த பரிந்துரைகளில் கூறப்பட்டவையில் **(k)** என்ற பரிந்துரை உச்சநீதிமன்ற தீர்ப்பில் **Sterlite Industries** வழக்கில் மேலே சொல்லப்பட்டது. **2013 (4) SCC 575** அதில் இறுதிநிலை எட்டப்பட்டுவிட்டது.

72) பரிந்துரை (r) சம்மந்தமாக இந்த தீர்ப்பாயத்தின் முன் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் அல்ல.

73) மற்றும் இதர பரிகாரங்கள் (s), (t) மற்றும் (u) இவற்றை **TNPCB** மற்றும் **CPCB** கூட்டுக்குழுவினால் மேல்முறையீட்டாரின் கட்சியை கேட்ட பின் மேல்நடத்தலாம். இந்த நிலையில் அடிப்படையாக ஒரு முடிவுவை எட்டுவதற்கு பார்க்க வேண்டிய விவரங்கள் என்னவென்றால் எந்த நிலையில் செயல்பாடுகள் மற்றும் வழிமுறைகள் **Environmental Protection Act 1986 and rules** அதன் கீழ் சொல்லப்பட்டுள்ளதோ அவற்றை கடைபிடிக்க வேண்டும் மற்றும் நடைமுறைப்படுத்த வேண்டும் அதை எங்ஙனம் தடுப்பதற்கோ குறைப்பதற்கோ கட்டுப்படுத்துவதற்கோ ஏற்படுத்தப்பட்டிருக்கும் தனிப்பட்ட பாதையாக இருப்பினும்.

74) **CPCB** மற்றும் **TNPCB** கூட்டாக புதிய நிலை கட்டுப்பாடுகள், நிலத்தடிநீர் உப்புத்தன்மை (**TDS**) மற்றும் அந்த இடத்தில் இருக்கும் கூடுதல் **TDS** நிலையை கருத்தில் கொண்டு கூடுதலாக தொழிற்சாலை கழிவு வெளியேற்றம் தொடர்பாக புதிய விதிமுறைகளை 2 மாதத்திற்குள் செய்து முடிக்க வேண்டும்.

75) மேலே சொன்ன பரிந்துரைகள் தவிர நாம் மேல்முறையீட்டாருக்கு கூறும் விவரம் என்றால் ஆபத்தை தவிர்க்க கீழ்க்கண்டவற்றை கூடுதலான நன்மையை கருதியும் மற்றும் சுற்றுசூழலை கருதியும் செயல்படுத்த வேண்டும்.

**i)** மேல்முறையீட்டார் இதற்காக பொதுமக்கள் கருத்துக்களை முன்வைக்கும் வண்ணமாக கலந்தாலோசிக்கும் வகையில் பிரத்யேகமான தனி இணையதளம் ஏற்படுத்த வேண்டும். அந்த இணைய தளத்தில் பாதிக்கப்பட்ட நபர்கள் சுற்றுசூழல் சம்மந்தமாக தங்களுடைய கஷ்டங்களை முன்வைக்கலாம். அதை ஒரு காலக்கெடுவிற்குள் பரிகாரம் கொடுக்க வேண்டும் மற்றும் அவற்றை கழிக்க ஆலை நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த இணையதளம் விவரங்கள் பொதுமக்களுடைய கவனத்தில் இருப்பதற்கு அதிகமான நபர்களை ஈர்க்கும் பொதுமக்கள் தொடர்பை ஏற்படுத்தக்கூடிய சாதனங்கள், மையங்கள் இவற்றுடன் இணைந்து அந்த இணையதளமானது மாவட்ட அதிகார மையம் மற்றும் **TNPCB** மற்றும் **CPCB** அவற்றுடன் தொடர்பு ஏற்படுத்தி நல்லமுறையில் மேல்முறையீட்டார் பொதுமக்களுடைய கஷ்டங்களை எங்ஙனம் காலக்கெடுவிற்குள் செய்து பரிகாரம்

கொடுக்கிறார்கள் என்பதை அவர்களுடைய கவனப்பார்வைகளிலே இருந்து வர வேண்டும்.

**ii**) மேல்முறையீட்டார் ஆலை ஒழுங்காக நிலத்தடி நீரை நிலையை கண்காணித்து எங்ஙனம் **TNPCB** நிர்ணயம் செய்திருக்கிறார்களோ, அங்ஙனம் செய்து அந்த விவரத்தை முழுமையான வடிவத்தில் தவறாமல் இணையதளத்தில் மேலே கூறப்பட்ட 70(**i**) அதன் நிலையில் தெரிவிக்க வேண்டும். இணையதளத்தில் காலா காலத்தில் நிலத்தடி நீர் விவரங்களை ஆய்வு செய்யாமல் மற்றும் அவற்றை இணையதளத்தில் ஏற்றாமலும் இருந்தால் அந்த நிலையில் மேல்முறையீட்டாருக்கு சுற்றுச்சூழல் நஷ்டியாக ரூபாய் பத்து லட்சம் ஒவ்வொரு தவறுதலுக்கும் மாவட்ட சட்ட சேவை மையத்திற்கு அனுப்ப வேண்டும். அதற்கு ஒரு தனி கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அந்த தொகையை கொண்டு சுற்றுசூழலுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் மற்றும் அவை சம்பந்தமாக ஒரு சுற்றுசூழல் கல்விக்கு செலவிட வேண்டும்.

**iii**) மேல் முறையீட்டார் ரூபாய் 2.5 கோடி வைப்பீடு வைக்க வேண்டும். அந்த வைப்பீடு மேல்முறையீட்டார் தவறாக 3.5 லட்சம் மெட்ரிக் டன் தாமிர கசடை பட்டா நிலங்களில் தேக்கி வைத்ததற்காக செலுத்த வேண்டும். அந்த தொகையை மாநில சட்ட சேவை மையத்திற்கு அனுப்பி வைத்து, அந்த தொகை மக்கள் மத்தியிலே சுற்றுச்சூழல் சம்பந்தமாக ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும், அதை மாநில சட்ட சேவை மையம் இதற்ககாக ஏற்படுத்தப்பட்டு மற்றும் இதன் வகைக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அந்த மாவட்டம் முழுக்க சட்ட சேவை மையம் ஒரு முழுமையான செயல் திட்டம் வகுக்க வேண்டும்.

**iv**) மேல்முறையீட்டார் இதை நடைமுறைப்படுத்துவதற்கு காலக்கெடு நிர்ணயித்து கொடுக்கவும் மற்றும் குழுவினுடைய அறிக்கையினுடைய முடிவுகளை நிலைப்படுத்தவும், அந்த குழுவினால் கூறப்பட்டுள்ள வரிசை எண்: 4(**e**), 4(**f**) மற்றும் 4(**g**). அவற்றை இணையதளத்தில் ஏற்ற வேண்டும். அந்த செயல்முறைகளை கண்காணிக்க வேண்டும். அது பொதுமக்கள் அன்றி மற்ற பொது மன்றங்கள் மற்றும் ஒரு மேற்பார்வை அமைப்பு, அதில் மாவட்ட அதிகாரிகள் மற்றும் **TNPCB** மற்றும் **CPCB** இவர்களை உள்ளடக்க வேண்டும். மேலே சொன்னவற்றை காலக்கெடுவில் கடைப்பிடிக்காதப்பட்சத்தில் சுற்றுச்சூழல்கள் நஷ்டியாக ரூபாய் பத்து லட்சம் ஒவ்வொரு தவறுக்கும் கொடுக்க வேண்டும்.

**v)** மேல்முறையீட்டார் ஆலை சுற்றுப்புற சூழலை பாதுகாப்பான முறையில் நடத்துதலை உறுதி செய்ய வேண்டும் மற்றும் தாமிர தாது மற்றும் கந்தக அமிலத்தின் கசிவு மற்றும் ஜிப்சம் குட்டையிலிருந்து தரைக் கசிவு ஏற்படுத்துதல், மற்றும் சேமிக்கப்பட்டுள்ள தாமிர சல்பேட், எலக்ட்ரோ லைட் அவற்றையும் தரைக்கசிவு ஏற்படாமல் தடுத்தல் இவைகளை பார்த்துக் கொள்ள வேண்டும். மாவட்ட நிர்வாகம் மேல்முறையீட்டார் தொழிற்சாலைக்கு வெளியே, தொழிற்சாலைக்கு உள்ளே அவசர நிலை தடுப்பு நடவடிக்கைகள் திட்டத்தை இவற்றை இணையதளத்தில் ஏற்றி, அடிக்கடி மோக பயிற்சிகள் நடத்த வேண்டும். அந்த மோக பயிற்சிகள் சுற்றுச்சூழல் நிலைக்கு அவசர நிலை ஏற்பட்டால், அதன் மூலம் விளையக்கூடிய சுற்றுப்புற ஆபத்துக்கள் சம்பவங்களை தவிர்த்து முதலியவைகளை ஆலை நிர்வாகம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**vi)** இது அன்றி கழிவுகளை பத்திரமாக வெளியேற்றுதல் மற்றும் வாயு வெளியேற்றுதல் மற்றும் திடப்பொருள் கழிவு இவற்றை கையாள்வதற்கு ஒரு கண்காணிப்பு குழு ஏற்படுத்தி, அதில் **TNPCB** மற்றும் **CPCB** மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் அடிக்கடி சம தவணையில் கூடி அவற்றை இணையதளத்தில் ஏற்றி, மொத்த நிலையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அந்த விழிப்புணர்வு எங்ஙனம் செயல்பாடுகள் நடந்து வருகின்றன, எங்ஙனம் மேல்முறையீட்டாரின் ஆலை சுற்றுப்புற சூழல் செயல்திறனில் செயல்படுகின்றன என்பதை கணிக்க வேண்டும்.

76. அந்த வழக்கில் கேட்கும் காலத்தில் மேல்முறையீட்டார் சார்பாக **CPCB-**ன் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாத காரணம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேல்நடத்த முடியாத காரணம் மாவட்ட நிர்வாகம் ஒத்துழைப்பு தராத காரணமாக சொன்ன நிலையில், அங்ஙனம் மாவட்ட நிர்வாகம் இருப்பினும், அவர்கள் ஒத்துழைக்காமல் இருந்தாலும் மற்றும் 09.08.2018 மற்றும் 20.08.2018 ஆகிய தேதிகளில் **CPCB-**யின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவுகளை கடைப்பிடிக்காமல் இருந்தால், அது பொது மக்களுடைய பாதுகாப்பு நிலையை அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டதாகும். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் இனி பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு ஒரு உறுதி அளிக்கலாம். பொதுமக்களுடைய பாதுகாப்பை கருதியும் மற்றும் அதை தவறும்பட்சத்தில் அதை கடின நிலை கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

77. இந்த வழக்கை கேட்கும்காலத்தில் மேல்முறையீட்டார் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் ஒரு அறிக்கையை சமர்பித்தார். அந்த அறிக்கையின்படி மேலும் 100 கோடி ரூபாய் பொதுமக்களுடைய நலன் நடவடிக்கைகாக செலவிடப்படும் மற்றும் அங்கு சுற்றியுள்ள மக்களின் நலன் கருதி செலவிடப்படும். இதை ஒரு நல்லெண்ணம் வகைக்காக முன் வைத்தார்கள். அந்த 100 கோடி ரூபாய் குடிநீர் திட்டங்களுக்கும் செலவு செய்யலாம் மற்றும் மருத்துவமனை மற்றும் மருத்துவ சேவைகள் மற்றும் அந்த பகுதியில் வசிப்பவர்களுடைய திறமையை மேம்படுத்துவதற்கும், வளர்ப்பதற்கும் செலவிடலாம். இங்ஙனம் மேல்முறையீட்டார் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் கூறியதை நாங்கள் கோப்பில் ஏற்றுக் கொண்டு, அதன் காரணமாக கீழ்கண்ட உத்தரவுகளை பிறப்பிக்கிறோம். மேல்முறையீட்டார் ஆலை ரூ.100 கோடி மூன்றாண்டுகளுக்குள் செலவு செய்ய வேண்டும். அந்த செலவினங்கள் சுற்றியுள்ள வசிப்பவர்களின் நன்மைக்காகவும் செலவிட வேண்டும். இதற்காக ஒரு செயல்முறை திட்டத்தை வகுக்க வேண்டும். எங்ஙனம் அந்த தொகையை **MoEF&CC** அவர்களுடைய அனுமதியின் பேரில் மற்றும் அவர்களுடைய மேற்பார்வையின் கீழ் அந்த செயல்முறைத்திட்டம், நல்ல முறையில் நடக்கிறதா என்பதை கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நடவடிக்கையினுடைய திட்டம் மற்றும் அதனால் ஏற்படும் முன்னேற்றங்கள், அதை நடைமுறைப்படுத்துவதனால் ஏற்படும் நல்ல விளைவுகள் இவற்றை இணையதளத்தில் ஏற்றி மக்கள் கவனத்தை ஈர்ப்பதற்கு செயல்படுத்த வேண்டும்.

78. அந்த இந்த நிலையில் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. எந்த உத்தரவுகள் தாக்குதலுக்கு உட்பட்டதோ, அவற்றை செல்லத்தக்கது அல்ல என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் **TNPCB-**யை புதிய உத்தரவு மூலம் ஆலையை திறப்பதற்கு அங்கீகாரம் அளிக்க வேண்டும் மற்றும் ஆபத்தை விளைவிக்கும் பொருள்களை கையாள்வதற்கு அனுமதிக்க வேண்டும். மேலே சொன்ன விவரங்களை கொண்டு சுற்றுப்புற சூழ்நிலையை பாதுகாக்கும் அதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும், அது சட்டத்திற்கு உட்பட்டு செய்வதற்கும் மூன்று வார கால கெடு இதன் மூலம் இன்றைய தினத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. மேல்முறையீட்டாருக்கு மின்சாரத்தையும், பழைய நிலைக்கு அவர்கள் செயல்பாட்டிற்காக திரும்ப அளிக்க வேண்டும். இது மேல்முறையீட்டார்கள் பத்தி 70, 75 மற்றும் 77 இவற்றை நடைமுறைப்படுத்தும் நிலையிலும் இந்த உத்தரவுகள் அமலுக்கு வரும்.

79. இந்த வழக்கு அங்ஙனம் முழுமையாக முடிக்கப்படுகிறது. தற்பொழுது இருக்க கூடிய இடைக்கால மனுக்களும் அங்ஙனம் முடிக்கப்படுகின்றன.

ஆதர்ஸ் குமார் கோயல், **CP**

ரகுவேந்தர **S.** ரதோர், **JM**

**K.** ராம கிருஷ்ணன், **JM**

**Dr.** சத்தியவான் சிங் கர்பியால், **EM**

**Dr.** நஜின் நந்தா, **EM**

டிசம்பர் 15, 2018